GML

# வணக்கம் ரோட்டரி

VANAKKAMM ROTARY - DISTRICT 2982

மாவட்டம் 2982

தமிழ் மாத இதழ்

| மலர் - 1 | இதழ் - 1 | ஜுலை 2025 | தமிழ் மாத இதழ் | விலை : ரூ. 10/- |
|---|---|---|---|---|
| Volume - 1 | Issue - 1 | July 2025 | Tamil Monthly | Price : Rs. 10 |





Paul P. Harris

# SRI GOKULAM SPECIALITY HOSPITAL

**202, Bangalore Bye-Pass Road, Salem - 636 004. Ph : 0427-2338800**




Christy



Nalaas®

சத்துமாவு

## Christy Group of Companies

A-2, A -3, SIDCO Industrial Estate, Andipalayam,
Tiruchengode - 637 214, Namakkal District. Tamil Nadu. INDIA.

: 04288 288900 info@christygroup.in www.christyfoods.in

# Christy Quality Foods (I) Pvt Ltd

44/1, Bhavani By Pass Road,Chithode, Erode - 638102 For Enguires : 0424 2533150, 2533151

# பிரதியினுள்....




18
DOLS
சக்கர வியூம்



19
DLA & DGS
அரசவை



21
PELS & SELS
குருகுலம்



24
International
Assembly
@ Orlando, US



29
AG's
Ice Breaking





31
District
GOALS



32
AG's
"Pre Zone Meet"



33
AGTS
பாசறை

TEAM UNIQUE

தனித்துவமாக தன்னலமற்ற

நமது மாவட்டம் 2982-வின் இந்த வருடத்திற்கான கரு பொருள் **"UNIQUEZ".** இதன் மைய்ய பொருள் தனித்துவமாகவும் மற்றும் தன்னலமற்றதாகவும் இருத்தல் என்பதே ஆகும்.

இந்த கரு பொருளை அலங்கரித்துள்ள ஒவ்வொரு நிறமும் ஒவ்வொரு தத்துவத்தை குறிக்கிறது.

- முதலில் உள்ள நீல நிறம் பொறுப்பு மற்றும் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துகிறது.
- இரண்டாவதாக உள்ள ஊதா நிறம் இவ்வுலகின் மீதும் நம் சமுதாயத்தின் மீதும் உள்ள அன்பினை உணர்த்துகிறது.
- அடுத்து உள்ள மஞ்சள் நிறம் நம்பிக்கை மற்றும் அறிவாற்றலை காட்டுகிறது.
- ஆரஞ்சு நிறம் ஆற்றல் மற்றும் மகிழ்ச்சியினை ஊக்குவிக்கிறது
- இறுதியில் உள்ள பச்சை நிறம் ஒரு புதிய துவக்கம் மற்றும் அதன் தரம் பற்றி பறைசாற்றுகிறது.

இவை அனைத்தும் இணைந்து நம் மாவட்டத்தை இந்த உலகம் போற்றும் பல சேவைகள் செய்து நம் சமுதாயத்தையும் அதன் சுற்றத்தையும் செம்மைப்படுத்துவோமென ஒளிர்விக்கிறது.

## விடைபெற்ற இரு துருவங்களின் நல்லாசியுடன்...



**Rtn. R. VASU**
Past District Governor



**Rtn. VELAYUTHA RAVINDRAN**
Past District Governor

இரு துருவங்களின் இழப்பு, பெரும் துயரத்தின் திணிப்பு.
ரோட்டரி என்பது கடலன்றோ, எங்கள் படகின் இரு துடுப்புகள் தொலைந்ததின்றோ,
அருகிலிருந்து வழிநடத்துனீர்கள், இப்போது தொலைவிலிருந்து வழிகாட்டுகிறீர்கள்,
அவ்வளவே ! அவ்வண்ணமே !



ஆசிரியர் பக்கம்

# வணக்கம் ரோட்டரி

இது வெறும் வணங்கும் சொல் அல்ல, இதில் ஒரு உணர்வு, சிலரின் படைப்பு, பலரின் உழைப்பு மற்றும் ரோட்டரி சமூகத்தின் ப்ரத்தியேக நிகழ்வுகள் அடங்கியுள்ளது.

ரோட்டரி சமூகத்தில் பலரது வாழ்க்கையை மாற்றியுள்ளது, இது அனைத்து ரோட்டரி நண்பர்களும் அறிந்தவையே. ரோட்டரி பல ரொட்டேரியன் வாழ்க்கையும் மாற்றியுள்ளது, இது சில ரொட்டேரியன்கள் மட்டுமே அறிந்த உண்மை . ஏன் சில ரொட்டேரியங்கள்? ஆம் ரோட்டரி இந்த உலகில் தேவை இருப்போருக்கு செய்யும் சேவையை போல ரொட்டேரியன்கள் செய்யும் சேவையை ஊக்குவிக்கும் தேவையும் இருக்கிறது.

என் கண்ணோட்டத்தில் ஒரு பதில் சொல்கிறேன். என் கடந்த பன்னிரண்டு வருட ரோட்டரி காலங்களில் எனக்கு கிடைத்த அனைத்து வாய்ப்புகளையும் நான் பயன்படுத்தியுள்ளேன். சென்ற 2024 - 25 'ல் என்னை ஒரு சிறந்த சங்கத்தலைவராக அமர்த்தி அழகு பார்த்த என் பீனிக்ஸ் நண்பர்களுக்கும், அதே 2024 - 25 'ல் மண்டலத்திலேயே சிறந்த தலைவர், சிறந்த சங்கம் மற்றும் இன்னும் சில சிறந்த விருதுகளை பெற எனக்கு ஒரு நல்ல புத்தகமாய் விளங்கிய **PDG. Rtn. V.** சிவகுமார் அண்ணா அவர்களுக்கும், இன்று ஒரு படி மேல் சென்று இந்த 2982 மாவட்டத்தின் **GML** ஆசிரியராக என்னை பொருத்தி என் திறமையை மேலும் மெருகேற்ற ஒரு பாலமாய் எனக்கு வாய்பளித்துள்ள நமது மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P.** சிவசுந்தரம் அண்ணா அவர்களுக்கும் என் சிரம் தாழ்ந்த வணக்கத்தோடு இந்த முதல் ப்ரதியை நம் மாவட்டத்திலுள்ள அனைத்து ரொட்டேரியன்களுக்கும் சமர்ப்பிக்கிறேன்.

முன்பு நான் சொன்னது போல் ரொட்டேரியன்களின் சேவையை ஊக்குவிக்க வேண்டிய தேவையை நம் மாவட்ட ஆளுநர் நன்கு அறிந்துள்ளதை அவரின் தொலைநோக்கு பார்வையால் வரையறுக்கப்பட்ட இந்த வருடத்திற்கான இலக்கிலே தெரிகிறது.

சரி என்னை பற்றிய ஒரு சிறு குறிப்பு; ரோட்டரி பீனிக்ஸ் சங்கத்தை சேர்ந்த நான் 2013-ம் ஆண்டில் எனது ரோட்டரி வாழ்வியலை துவக்கினேன். இந்த நேரத்தில் என்னை இந்த ரோட்டரி உலகிற்கு அறிமுகம் செய்த **Rtn.** ஐயப்பன் அவர்களை நினைவுகோருகிறேன்.

ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையையும் மூன்று அத்யாயங்களாய் வகுக்கலாம். முதலில் அவன் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கை, இரண்டாவது தன்னை சுற்றியுள்ள சமூக வாழ்கை, மூன்றாவது இவ்விரண்டையும் காக்கும் பொருட்டு தன் தொழில் அல்லது வருமான வாழ்கை. இந்த மூன்றையும் ஒரு மையப்புள்ளியில் இணைந்ததே என் ரோட்டரி அனுபவம்

நமது மாவட்ட ஆளுநர் என்னை **GML** ஆசிரியராக பொருத்திய பின்னர் எனக்கு இட்ட முதல் கட்டளை; இந்த வருடத்திற்கான பதிப்புகள் அனைத்தும் தரணி போற்றும் நம் தமிழ் மொழியிலேயே பிரசுரிக்கப்படவேண்டும் என்பதே. அக்கணம் சென்ற வருடம் நான் தவறவிட்ட என் தாயின் நினைவு எனக்கு பளிச்சிட்டது. காரணம் அவர் தமிழில் **M.A.,** பட்டபடிப்பை முடித்து தமிழ் புலவர் பட்டம் பெற்றவர். அவரின் ஆசீயோடு என் நம்பிக்கையை வேரூன்றி இந்த முதல் பிரதியை, அல்ல அல்ல முதல் படியை முடித்தேன்.

இந்த வாய்ப்பினை பயன்படுத்தி நமது **(GML)** "வணக்கம் ரோட்டரியில்" மாவட்டம் 2982 நிகழ்வுகள் மட்டுமல்லாது சமூகம், நல்லிணக்கம், வாழ்வியல் போன்ற பொது தலைப்புகளும் பகிரப்படும்.

மேலும் ஒவ்வொரு மாதமும் வெளிவரும் இதழ்களில் தொகுக்கப்படும் கட்டுரைகளை மையப்படுத்தி சில கேள்விகள் கேட்கப்படும். அதில் சரியான பதில் தருவோருக்கு அடுத்து வரும் ப்ரதியில் அவர்கள் கௌரவ படுத்தப்படுவார்கள்.

இந்த ப்ரதியை பொறுத்த வரை "பிரதியினுள்' என்ற முதல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து தலைப்புகளையும் அதன் அந்தம் வரை முழுமையாக உரை படுத்தியுள்ளேன். இது உங்களுக்கு கண்டிப்பாக பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.”

**Rtn. Hemanath**
**GML Editor**

# ரோட்டரி பன்னாட்டு தலைவரின் செய்தி



நண்பர்களே,

இரண்டு வாரங்களுக்கு முன்பு வரை நான் என் வீட்டில் என் பேரக்குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்தேன். சில நாட்களுக்கு முன்பு **Calgary**'க்கு விமானத்தில் சென்றுகொண்டிருந்த போது ஒரு அழைப்பு வந்தது திடீரென்று இந்த உலகளாவிய அமைப்பை வழிநடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டிய ஒரு வாய்ப்பு. அவ்வப்போது நாம் எங்கு இருக்க வேண்டும் என்பதை வாழ்கை தீர்மானிக்கிறது.

இந்த ஆண்டு நாம் ஒரு தெளிவான செய்தியுடன் தொடங்குகிறோம் **Unite for Good**. இது ஒரு எளிய சொற்றொடர் என்றாலும் சக்திவாய்ந்த ஒன்று. ஏனெனில் ஒவ்வொரு வெற்றிகரமான ரோட்டரி முயற்சிக்கும், ஒவ்வொரு சேவைக்கும், ஒவ்வொரு புதிய உறுப்பினர் வரவேற்கப்படுவதற்கும், ஒவ்வொரு உலகளாவிய சவாலையும் சந்திப்பதற்கும் பின்னால் இரண்டு விஷயங்கள் உள்ளன-நட்பு மற்றும் நம்பிக்கை.

இப்படித்தான் நாம் வலுவான சங்கங்களை உருவாக்குகிறோம். உபயோகமுள்ள கூட்டாண்மைகளை உருவாக்கி, உலகளாவிய பிரச்சினைகளை உள்ளூர் தீர்வுகளாக மாற்றுவது இப்படித்தான். பணிவு, மனிதநேயம் மற்றும் பரிவுடன் நாம் வழிநடத்தும் விதமும் இதுதான். நான் உங்களுடன் நேர்மையாக இருக்க இந்த தலைமை எப்போதும் எளிதானது அல்ல. நாம் மனிதர்கள், ஆம், நாம் தவறுகள் செய்கிறோம். நாம் சில நேரங்களில் உடன்படவில்லை, என்றாலும் ரோட்டரியில், நாம் ஒரு பெரிய விஷயத்திற்கு அழைக்கப்படுகிறோம். ரோட்டரியின் முழுக் கண்ணோட்டத்தைப் பற்றி சிந்திப்போம்.

நமது சமூகத்துக்குள்ளும், நமக்குள்ளும் நீடித்த மாற்றத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாற்றம் அதுவாக தொடங்காது, நாம் ஒருவருக்கொருவர் நடத்தும் விதத்தில் தொடங்குகிறது. நாம் எப்படிக் கேட்கிறோம், எப்படி ஆதரிக்கிறோம், எப்படிச் சேவை செய்கிறோம் என்பதில் இருந்து இது தொடங்குகிறது.

இந்த மனப்பான்மையுடன் இந்த ஆண்டை வழி நடத்துமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன். உறவுகள் மூலம் ரோட்டரியை வளர்ப்பது உங்கள் சங்கங்களை மிகவும் வரவேற்கக்கூடியதாகவும், நெகிழ்வானதாகவும், புதிய யோசனைகளுக்கு மிகவும் சிறந்ததாகவும் மாற்றுவதற்கு, நமது பதவிக்காலம் குறுகியது, ஆனால் தொடர்ச்சியுடனும் தொலைநோக்குப் பார்வையுடனும் நாம் திட்டமிட்டு செயல்பட்டால் நமது தாக்கம் நீடித்திருக்கும்.

உறுப்பினர்கள், போலியோ மற்றும் உலக அமைதி ஆகிய மூன்று முக்கிய முன்னுரிமைகளை நாம் நினைவில் கொள்வோம். போலியோவை ஒழிப்பதற்கு நாம் முன்னெப்போதையும் விட நெருக்கமாக இருக்கவேண்டும். குழந்தைகளுக்கு நாம் அளித்த வாக்குறுதியை நாம் காப்பாற்ற வேண்டும். மேலும் உலக அமைதியைப் பொறுத்தவரை-ரோட்டரி, நூற்றாண்டுக்கும் மேலாக அதை உருவாக்கி வருகிறது. ஒவ்வொரு தூய்மையான நீர் அமைப்பு மற்றும் ஒவ்வொரு தாய்வழி சுகாதாரத் திட்டமும் அமைதியை நோக்கிய ஒரு படியாகும்.

நான் ரோட்டரியில் ஒரு இளம் தொழில்முறை நிபுணராக சேர்ந்தேன், சேவை செய்ய ஆர்வமாக இருந்தேன். எனது சக ரோட்டேரியன்கள் என்னை நம்பி, புதிய பாத்திரங்களை ஏற்க என்னை ஊக்குவித்தனர், அவ்வாறு செய்வதன் மூலம், ரோட்டரி எனது வாழ்க்கையை மாற்றியது. இது எனக்கு தைரியத்தையும் தன்னபிக்கையும் அளித்தது, எல்லாவற்றிற்கும் மேலாக, இது எனக்கு நல்ல நண்பர்களை கொடுத்தது, எனது சங்கத்தை கொடுத்தது, உலகெங்கிலும் உள்ள எனது குடும்பத்தினரை கொடுத்தது .

இப்போது, நண்பர்களே... உங்கள் கனவுகளை இழுத்துச் செல்லுங்கள், குறிப்பாக நீங்கள் சாதிக்க முடியாத அளவுக்கு பெரியது என்று நினைத்த கனவுகளை எடுத்துக் கொள்ளுங்கள். அவைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருவோம். நமது சங்கம், நமது சமூகம் மற்றும் நமது உலகின் நன்மைக்காக ஒன்றிணைவோம். இதை சேவைக்கான ஆண்டாக மட்டுமல்லாமல், மகிழ்ச்சி, இணைப்பு மற்றும் அன்பின் ஆண்டாக மாற்றுவோம்.

நன்றியுடனும் அன்புடனும்,

**Francesco Arezzo**

President, Rotary International, 2025-26

# மாவட்ட ஆளுநர் செய்தி



ரோட்டரி மாவட்டம் 2982'வின் முதல் மாத இதழான "**வணக்கம் ரோட்டரி**" **மாவட்டம் 2982** வெற்றிகரமாக வெளியிடப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த அரும்பணியைச் சாத்தியமாக்கிய தலைமை ஆசிரியர் சேலம் பீனிக்ஸ் சங்கத்தைச் சார்ந்த **Rtn.** ஹேமந்த், மற்ற சங்கத்தைச் சார்ந்த உதவி ஆசிரியர் குழுவினர் மற்றும் சேலம் ஜங்ஷன் ரோட்டரி சங்கத்தைச் சார்ந்த **Rtn.** சோ கண்ணன் தலைமையிலான பதிப்பாசிரியர் குழுவினர் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த பாராட்டுகள்! வாழ்த்துக்கள்!!

**"வணக்கம் ரோட்டரி மாவட்டம் 2982" இதழின் சிறப்பு அம்சங்கள் :**

இந்த இதழ் ரோட்டரி உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் பல பயனுள்ள தகவல்களை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதன் முக்கிய அம்சங்கள் சில :

- ☛ மாவட்டத்தின் செயல்பாடுகள்: மாவட்டம் 2982'வில் நடந்த நிகழ்வுகள், திட்டங்கள் மற்றும் சாதனைகள் பற்றிய விரிவான தகவல்கள் இதில் இடம்பெறும். இது உறுப்பினர்கள் தங்கள் மாவட்டத்தின் பங்களிப்பை அறிந்துகொள்ள உதவும்.
- ☛ சாதனையாளர்களின் நேர்காணல்கள்: ரோட்டரி பணிகளில் சிறந்து விளங்கும் உறுப்பினர்கள் மற்றும் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் நபர்களின் நேர்காணல்கள் இடம்பெற்று, மற்றவர்களுக்கு உத்வேகம் அளிக்கும்.
- ☛ அறிவூட்டும் கட்டுரைகள்: சமூக மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு தலைப்புகளில் அறிவார்ந்த கட்டுரைகள் வெளியாகும். இது உறுப்பினர்களின் புரிதலை மேம்படுத்தி, புதிய சிந்தனைகளைத் தூண்டும்.
- ☛ வரவிருக்கும் நிகழ்வுகள்: மாவட்ட அளவில் நடைபெறவிருக்கும் கூட்டங்கள், பயிற்சி முகாம்கள், சமூக சேவைத் திட்டங்கள் போன்றவற்றுக்கான அறிவிப்புகள் வெளியாகி, உறுப்பினர்கள் பங்கேற்க வழிவகுக்கும்.
- ☛ புகைப்படத் தொகுப்பு: ரோட்டரி நிகழ்வுகளின் புகைப்படங்கள், உறுப்பினர்களின் செயல்பாடுகள், வெற்றிப் பணிகள் போன்றவற்றை உள்ளடக்கிய வண்ணமயமான புகைப்படத் தொகுப்பு இந்த இதழை அலங்கரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த இதழ் மாவட்டத்தின் அனைத்து ரோட்டரி சங்கங்களுக்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்பட்டு, தகவல் பரிமாற்றத்தையும், ஒருங்கிணைப்பையும் மேம்படுத்தும். மேலும், ரோட்டரியின் கொள்கைகளையும், சேவை மனப்பான்மையையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க இது ஒரு சிறந்த ஊடகமாக அமையும்.

மீண்டும் ஒருமுறை, "வணக்கம் ரோட்டரி மாவட்டம் 2982" இதழைத் திறம்பட வெளிக்கொண்டு வந்த பதிப்பாசிரியர்கள் மற்றும் குழுவினர் அனைவருக்கும் எங்களின் உளமார்ந்த பாராட்டுகள். அவர்களின் அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும் நிச்சயம் பாராட்டுக்குரியது. இந்த இதழ் தொடர்ந்து மாதம் தவறாமல் வெளிவந்து, ரோட்டரி மாவட்டத்தின் குரலாக ஒலிக்கும் என்ற உறுதியோடு

உங்கள் ரோட்டரி மாவட்ட ஆளுநர்
**Rtn. Er. P. சிவசுந்தரம்**

# Dist. First Lady Message



அன்புள்ள சக ரோட்டரி நண்பர்களே,

உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பது எனக்கு மிக பெரும் கவுரவமும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது. இந்த துடிப்பான ரோட்டரி குடும்பத்தின் முதல் பெண்மணி என்ற முறையில், உங்கள் அனைவரின் சேவைக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பால் நான் மிகவும் ஈர்க்கப்பட்டுள்ளேன்.

ரோட்டரி என்பது ஒரு உலகளாவிய அமைப்பு என்பதை விட – கருணை, ஒருமைப்பாடு மற்றும் சமூக மாற்றத்திற்கான செயல்களால் இயக்கப்படும் ஒரு உலகளாவிய இயக்கமாகும். நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு திட்டமும், நீங்கள் தொடும் ஒவ்வொரு உயரமும், அளவிட முடியாத சேவைகளும், கலவையான கருத்துக்கள் மற்றும் நிகழ்வுகள் உள்ள இந்த உலகினை அமைதியாய், அருமையை, அனைவருக்குமாய் வாழ ஒரு சிறந்த இடமாக மாற்றும் வல்லமை உள்ளது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

ஒன்றாக, நாம் தொடர்ந்து இந்த சமூகத்தை மேம்படுத்துவோம், தேவைப்படுபவர்களுக்கு அதிகாரம் அளிப்போம், பரிவுடனும், நோக்கத்துடனும் வழிநடத்துவோம். குடும்பமாக ஒருவருக்கொருவர் ஆதரவளிப்போம், கூட்டுறவில் ஒன்றாக வளர்வோம், அடுத்த தலைமுறை தலைவர்களை ஊக்குவிப்போம்.

நீங்கள் செய்யும் அர்த்தமுள்ள பணிக்கு கோடான கோடி நன்றிகள். சேவையிலும் நம்பிக்கையிலும் உங்களுடன் இணைந்து செல்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

நன்றியுடனும் பாராட்டுடனும்,

**Rtn. MD. G.K. சுதாமதிதேவி**

# Dist. General Secretary Message



ரோட்டரி நண்பர்களுக்கு வணக்கம்

இந்த "வணக்கம் ரோட்டரி" வாயிலாக தங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி கொள்கின்றேன். நமது ரோட்டரி மாவட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தலைவர் செயலர் உதவி ஆளுநர்கள், மண்டல பொறுப்பாளர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள், சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தாங்கள் வருங்காலங்களில் தங்கள் சங்கத்தினை மிகவும் திறம்பட நடத்தி நம்முடைய மாவட்டத்தினுடைய புகழினை மென்மேலும் உயர செய்வீர்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நமது 2982 மாவட்டத்தின் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோளை கடந்து, நமது மாவட்ட ஆளுநருக்கு உறுதுணையாக இருந்து அனைத்து பணிகளையும் செவ்வனே செய்வோம் என்பதிலும் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன். அதுமட்டுமின்றி நம்முடைய சர்வதேச ரோட்டரியின் **'Unite for Good'** என்ற கொள்கைக்கு ஏற்ப நாம் அனைவரும் ஒற்றுமையை நோக்கி நற்சேவைகளை செய்வதற்குரிய அனைத்து விதமான முயற்சிகளும் உங்கள் மூலம் நிறைவேறும் என்று எண்ணுகிறேன். ஒவ்வொரு சங்கமும் வளர்ச்சி அடையும் அதே வேளையில், இந்த ரோட்டரியில் இருப்பதன் மூலம் தங்களையும் உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதே நம்முடைய மாவட்ட ஆளுநரின் நோக்கமாகும்.

ஆகவே நம்மை உயர்த்தி கொள்வதற்கும் நம்மை சார்ந்த சமுதாயத்தை உயர்த்திவிடுவதிலும் நமது பங்கு மிகவும் சிறப்பாக அமைய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறான வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை என்பதோடு **Unique** என்ற நம்முடைய மாவட்டத்தின் தாரக மந்திரத்தை மனதில் நிறுத்தி நம்முடைய கடமையை செய்யவேண்டுமென அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி.

ரோட்டரி சேவையில்,

**Rtn. S. கர்ணன்**

# பன்னாட்டு ரோட்டரி தலைவரை பற்றி...

இத்தாலி நாட்டை சேர்ந்த **Rtn.** பிரான்செஸ்கோ அரேஸோ, ரோட்டரி 2025-26 ஆம் ஆண்டிற்கான ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இத்தாலியின் ரகுசா ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான பிரான்செஸ்கோ அரேஸோ, 2025-26 ஆம் ஆண்டிற்கான ரோட்டரி இன்டர்நேஷனலின் தலைவராக ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர்கள் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜுலை 1 ஆம் தேதி அரேஸோ **RI** தலைவராக பதவியேற்றார்.

ஜுன் 8 அன்று ஆர்ஐ தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட மரியோ சீசர் மார்டின்ஸ் டி கமர்கோ எதிர்பாராத விதமாக தனது ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பொறுப்பினை ராஜினாமா செய்தார். இதனை தொடர்ந்து ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குனர்கள் வாரியம் ஒரு சிறப்பு அமர்வை நடத்தியது. அந்த அமர்வின் வழிகாட்டுதலின் படி சென்ற ஆகஸ்ட் 2023 இல் ரோட்டரி இன்டர்நேஷனலின் தலைவருக்கான நியமனக் குழுவால் பரிசீலிக்கப்பட்ட வேட்பாளர்களின் பட்டியலிலிருந்து ஒரு புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் தான் **Rtn.** பிரான்செஸ்கோ அரேஸோ.

திரு அரேஸோ அவர்கள் ஒரு சிறந்த தனியார் பல் மருத்துவ நிபுணர் ஆவார். சர்வதேச அளவில் இத்தாலி, ஐரோப்பிய மற்றும் அமெரிக்கவை சார்ந்த பல் மருத்துவர் சங்கங்களின் கூட்டமைப்பின் உறுப்பினராகவும் உள்ளார். அவர் ரகுசா எனும் இத்தாலியில் உள்ள மாகாணத்திற்கான பல் மருத்துவர்கள் தேசிய சங்கத்தின் துணைத் தலைவராகவும், இத்தாலிக்கான தேசிய அறக்கட்டளையின் தூதுக்குழுவின் நிறுவனராகவும் மற்றும் தலைவராகவும் ஏழு ஆண்டுகள் பொருப்புவகித்துள்ளார். இவர் மால்டா எனும் இறையாண்மை ஒழுங்கிற்கு கீழ்ப்படிதல் மற்றும் இறை பக்தியில் மிக பெரும் பற்றுள்ளவர் ஆவார்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக ரோட்டரி உறுப்பினராக இருக்கும் அரேஸோ, **Joint Strategics Committee**-யின் துணைத் தலைவராகவும், **RI** இயக்குநராகவும், **Learning Facilitator** ஆகவும், தனது ரோட்டரி மாவட்டத்தின் மாநாட்டு பிரதிநிதியாகவும் பொருப்புவகித்துள்ளார்.

Rtn. அரேஸோ அவர்கள், ரோட்டரி அறக்கட்டளையின் Benefactor ஆவர். இவரது மனைவி **Anna Maria Criscione** சுற்றுலாத் துறையில் ஒரு சிறந்த தொழில்முனைவோர் ஆவார். இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்.





# Dist. Publication Chair's Message






அன்பு ரோட்டரி நண்பர்களுக்கு வணக்கம்.

2025-26ம் ரோட்டரி ஆண்டில் நமது ரோட்டம் மாவட்டம் 2982 சார்பில் பப்ளிகேஷன் ஆரம்பித்து அதனை விரிவாக்கும் எண்ணத்தில் அதற்கென்று பிரத்யேகமாக ஒரு பதவியை உருவாக்கி அதில் என்னை மாவட்ட பப்ளிகேஷன் சேர்மனாக நியமித்த நமது மாவட்ட ஆளுநர் சிவசுந்தரம் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பப்ளிகேஷனில் எந்த வருடமும் இல்லாமல் கண்களுக்கு எந்தவித மாயமும் இல்லாமல் புதிதாய் படிக்கும் திறனை வளர்க்கும் எண்ணத்தில் இந்த வெளியீடுகளை சமர்ப்பிக்கின்றோம். அதன்படி எனக்கு துணையாக இருக்கும் **Publication Co-Chair Rtn. M.** ஷாநவாஸ், டைரக்டரி சேர்மேன் **Rtn.** ஜெகதீஸ், **Co-Chair Rtn. F.** இப்ராஹிம் ஆகியோர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.




இந்த வருடம் மாவட்ட டைரக்டரி அனைத்து சங்கங்களின் தலைவர் மற்றும் செயலாளர்களின் விவரங்கள், துணை ஆளுநர்கள், மண்டல பொறுப்பாளர்கள் விவரங்கள், விளரம்பரங்கள் அனைத்து உரிய நேரத்தில் வழங்கியதற்கு நன்றி.

இந்த வருடம் **GML** "வணக்கம் ரோட்டரி " என்ற பெயரில் முறைப்படி பதிவு செய்யப்பட்டு அது முறையான பத்திரக்கையை போல உருவாக்கி நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து ரோட்டரி உறுப்பினர்களுக்கும் சென்றடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு உறுதுணையாக உள்ள **GML Editor Rtn.** ஹேமநாத்-க்கும், அடுத்தபடியாக இதுவரை நமது மாவட்டம் 2982-வில் முன்னாள் ஆளுநர்கள் நமது மாவட்டம் முழுவதும் கிராண்ட்ஸ் மூலம் செய்த நலத்திட்ட உதவிகளை தொகுத்து வழங்கி இருக்கிறோம். இது நமது மாவட்டம் ரோட்டரி ஃபவுன்டேஷன் மூலம் என்ன செய்கிறது என்பதை தெரிளிவாக்கும். இதன் மூலம் பல திட்டங்கள் உருவாக வழி வகுக்கும்.




இந்த வணக்கம் ரோட்டரியின் மூலம் தற்போது புதியதாக பொறுப்பேற்றுள்ள அனைத்து சங்க தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் மண்டல, மாவட்ட பொறுப்பாளர்கள் அனைருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் இதன் மூலம் தெரிவத்துக் கொள்கிறேன்.

நன்றி !

என்றும் ரோட்டரி சேவையில்,

**Rtn. So. Kannan**

**Dist. Publication Committee Chair**

# முதல் நான்கு ரோட்டேரியன்கள்



இடபுரமிருந்து குஸ்டாவஸ் லோயர், சில்வெஸ்டர் சீல், ஹிராம் ஈ, பால் ஹாரிஸ்

பிப்ரவரி 23,1905 அன்று, பால் ஹாரிஸ், குஸ்டாவஸ் லோயர், சில்வெஸ்டர் சீல் மற்றும் ஹிராம் ஈ. முதல் ரோட்டரி சங்கத்தின் கூட்டத்தை லோஹ்ரின் அலுவலகத்தில் கூடினார்கள்.

வணிக காலத்தயுவு மற்றும் நட்புறவுக்கான ஹாரிஸின் விருப்பம் இந்த நான்கு பேரையும் ஒன்றிணைத்தது, இறுதியில் ஒரு சர்வதேச சேவை மற்றும் கூட்டுறவு அமைப்புக்கு வழிவகுத்ததுள்ளது.

முதல் நான்கு ரோட்டேரியன்கள் இணைந்ததோடு, மற்றும் "ஐந்தாவது ரோட்டேரியன்" என்று அவ்வப்போது அழைக்கப்படும் ஹாரி எல். ரக்ல்ஸ், நமது ரோட்டரி நிறுவனத்திற்கு வெவ்வேறு தொழில்முறை கண்ணோட்டங்களைக் கொண்டு வந்தனர்.

ரோட்டரியின் நிறுவனர் ஹாரிஸ், ஏப்ரல் 19,1868 அன்று அமெரிக்காவின் விஸ்கான்சின், ரேசினில் பிறந்தார். வெர்மான்ட்டில் மாகாணத்தில் தனது தந்தைவழி தாத்தா பாட்டியிடம் வளர்க்கப்பட்டார். வெர்மாண்ட் பல்கலைக்கழகம், பிரின்ஸ்டன் மற்றும் லோவா பல்கலைக்கழகத்தில் பயின்றார். வழக்கறிஞரான ஹாரிஸ், 1910 முதல் 1912 வரை ரோட்டரி தலைவராகவும், தனது இறுதி நாளான 1947 ஜனவரி 27 அன்று வரை சிகாகோ ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராகவே இருந்தார்.

சுரங்கப் பொறியாளரான லோஹர், அக்டோபர் 18,1864 அன்று அமெரிக்காவின் இல்லினாய்ஸில் உள்ள கார்லின்வில்லில் பிறந்தார். அவர் ஒரு சில ஆண்டுகள் மட்டுமே ரோட்டரியனாக இருந்தார், தனது சங்கத்திலோ அல்லது சர்வதேச அளவிலோ ரோட்டரியின் எந்த ஒரு பொறுப்பிலும் வகிக்கவில்லை இவர் ஆனால் அந்த முதல் ரோட்டரி கூட்டம் சிகாகோ நகரத்தில் உள்ள **UNITY** கட்டிடத்தின் அறை 711 இல் இவரது அலுவலகத்தில் தான் நடைபெற்றது. இவர் 1918 மே 23 அன்று சிகாகோவில் மறைந்தார்.

வணிக தையல்காரரான ஷோரே, ஆகஸ்ட் 1862 இல் அமெரிக்காவின் மைனேயில் பிறந்தார். சங்கத்தின் முதல் ஆண்டில் செயலாளராக பணியாற்றினார். இவர் ஒரு சில ஆண்டுகள் மட்டுமே ரோட்டரியனாக இருந்தார். மார்ச் 1944 ஆம் ஆண்டு ஷோரே மறைந்தார்.

நிலக்கரி வியாபாரியான ஷீல், 1905 இல் சிகாகோ சங்கத்தின் முதல் தலைவராகவும், ஜுலை முதல் டிசம்பர் 1945 வரை ரோட்டரி இன்டர்நேஷனலின் பொருளாளராகவும் பணியாற்றியுள்ளார். ஜுன் 1870 இல் அமெரிக்காவின் இந்தியானாவில் உள்ள டெர்ரே ஹவுட்டில் எனும் ஊரில் பிறந்த சீல், டெர்ரே ஹவுட் பிசினஸ் கல்லூரியில் பயின்றார் மற்றும் ஸ்பானிஷ்-அமெரிக்கப் போரின் போது **U.S.** இராணுவத்திலும் பணியாற்றியுள்ளார். அவர் 1902 முதல் 1939 இல் ஓய்வு பெறும் வரை ஷியல் நிலக்கரி நிறுவனத்தின் தலைவராக இருந்தவர். அவரும் ஹாரிஸும் வாழ்நாள் முழுவதும் நண்பர்களாக மாறி சிகாகோவின் தெற்கு பக்கத்தில் ஒருவருக்கொருவர் தங்கள் வீட்டின் அருகாமையிலேயே வசித்து வந்தனர். 1945 டிசம்பர் 17 அன்று மறைந்த சீல், தனது உற்ற நண்பரான ஹாரிஸ் அருகிலேயே ஹோப் மலையி பகுதியில் அடக்கம் செய்யப்பட்டார்.

மிச்சிகன் மாகாணத்தை சேர்ந்த ரக்லஸ், இல்லினாய்ஸின் எவன்ஸ்டனில் உள்ள வடமேற்கு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார், மேலும் சங்கத்தின் இரண்டாவது கூட்டத்தில் ரோட்டரியில் சேர்ந்தார். அவர் சிகாகோ ரோட்டரி சங்கத்தின் முதல் ஆண்டில் அதன் பொருளாளராகவும், 1908 முதல் 1910 வரை சங்கத்தலைவராகவும், 1912 முதல் 1913 வரை ரோட்டரி இயக்குநராகவும் இருந்தார். ரோட்டரி சங்க கூட்டங்களில் பாட்டு பாடுவதை அறிமுகப்படுத்தியதற்காக அவர் அறியப்படுகிறார். இவரது அச்சு நிறுவனம், **H.L. Ruggles & Co.,** தி நேஷனல் ரோட்டேரியனின் முதல் இதழ் மற்றும் முதல் ரோட்டரி பாடல் புத்தகத்தை அச்சிட்டது. அவர் 23 அக்டோபர் 1959 அன்று மறைந்தார், அவரது சொந்த சங்கமான சிகாகோவின் ரோட்டரி சங்கத்தை தவிர ஏழு சங்கங்களின் கவுரவ உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

UNITE FOR GOOD

# 2025-26ம் ஆண்டின் ரோட்டரி பன்னாட்டு கரு பொருள் "UNITE FOR GOOD"

2025-2026 ரோட்டரி ஆண்டிற்கான ரோட்டரி இன்டர்நேஷனலின் கருப்பொருள் **"Unite For Good"** என்பதாகும். இந்தக் கருப்பொருள் கூட்டு நடவடிக்கையின் சக்தியையும், **"People of Action"** என்ற முறையில் ரோட்டரி உறுப்பினர்கள் எவ்வாறு தங்கள் சமூகங்களிலும் உலகெங்கிலும் நேர்மறையான மாற்றத்தை உருவாக்க ஒன்றிணைய முடியும் என்பதையும் வலியுறுத்துகிறது . இது உறுப்பினர்களை மனித தொடர்பைப் பயன்படுத்தி பிரச்சினைகளைத் தீர்க்கவும் சமூகத் தேவைகளை நிவர்த்தி செய்யவும் ஊக்குவிக்கிறது.

**ஒற்றுமையில் கவனம் செலுத்துங்கள் :** "நன்மைக்காக ஒன்றுபடுங்கள்" என்பது, வேறுபாடுகளால் பிளவுபட்ட உலகில் ஒன்றிணைக்கும் சக்தியாக ரோட்டரியின் பங்கை எடுத்துக்காட்டுகிறது.

**செயல் சார்ந்தது :** ரோட்டரி உறுப்பினர்கள் மாற்றம் நிகழும் வரை காத்திருக்க மாட்டார்கள், அதைச் செயல்படுத்த அவர்கள் தீவிரமாக உழைக்கிறார்கள் என்ற கருத்தை இந்தக் கருப்பொருள் வலுப்படுத்துகிறது

**உலகளாவிய தாக்கம் :** முக்கியமான பிரச்சினைகளை நிவர்த்தி செய்து நீடித்த நேர்மறையான மாற்றத்தை உருவாக்கும் திட்டங்களில் ஒத்துழைக்க உறுப்பினர்களை ஊக்குவிப்பதை இந்த கருப்பொருள் நோக்கமாகக் கொண்டுள்ளது

**சமூக ஈடுபாடு :** இது ரோட்டரி சங்கங்கள் சாத்தியமான நன்கொடையாளர்களுடன் இணைவதற்கும், அவர்களின் பணியின் தாக்கத்தை பரந்த சமூகத்திற்கு வெளிப்படுத்துவதற்கும் ஊக்குவிக்கிறது.

**செயலழைப்பு :** உள்ளூர் மற்றும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள உறுப்பினர்கள் தங்கள் திறன்களையும் வளங்களையும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் அழைப்பாக இந்த கரு பொருள் செயல்படுகிறது.

# DISTRICT SIGNATURE PROJECTS



**Rtn. G. Revathi**
District Chairman,
Signature Projects,
Cell : 99947 21195

1. **மருத்துவ முகாம்**
   - ஜெம் மருத்துவமனையுடன் இணைந்து வயிறு, கல்லீரல், கணையம் மற்றும் குடல் இலவச பரிசோதனை முகாம்
   - தரண் மருத்துவமனையுடன் இணைந்து பெண்களுக்கான மார்பக புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் கண்டறியும் இலவச முகாம்.
   - ராயல் கேர் மருத்துவமனையுடன் இணைந்து மருத்துவ முகாம்.
2. **மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள்**
   - சுயம்வரம்.
   - செயற்கை கை கால் பொருத்தும் முகாம்
   - மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டி
3. **வேலை வாய்ப்பு முகாம்**
4. **இலவச நாப்கின்கள் வழங்கும் திட்டம்**
5. **சங்கங்களின் சார்பில் விவசாயிகளை கௌரவப்படுத்தும் விதமாக தேசத்தின் உயிர்நாடி என்ற விருது வழங்கும் திட்டம்.**

# குறுக்கு எழுத்துப் போட்டி




**இடமிருந்து வலம்**

1. பிரியமானவர்களின் கதை (3, 2)
6. வைட்டமின்–ஏ அளித்தால் அந்திப் பொழுதின் இருள் நீங்கலாம் (5)
7. நீங்களும் நானும் பார்க்க (2,2)
11. சிறுவயதுப் பட்டாம்பூச்சி உதறித் தள்ளிய போர்வை (4)
13. கோவில் வம்சத்திற்குள் இப்படி ஒரு மரம் (4)
16. தற்பெருமையால் கெட்டுப் போனாலும் பாதுகாப்புடன் வீசுகிறது காற்று (5)
17. ஒரு வீசம் கைமா கிளறிடு அன்னையே! (1, 4)

**வலமிருந்து இடம் :**

10. பழங்காலத் தமிழ் முகம் (4)

**மேலிருந்து கீழ் :**

2. கலங்கலாகத் தனது சாயம் ஆன போதும் பண்புடன் பழகும் குணம் (5)
3. ஒன்பது மாதம் ஓடிப் போனது தெரியாத கணவர் தம் மனதை இப்படியா குழப்புவது? (1, 3)
4. குடும்ப நலம் பற்றிய அரசாங்கத்தின் கோணம் (5)
5. நாட்டுப் பண் புதிய இசையில் ஒலித்தாலும் அதற்குள் மூழ்கிடும் நாட்டுப் பற்றாளரின் தன்மை (3)
7. முழுநீளக் கதை சொல்லும் கருநீலப் பழம் (3)
8. தண்ணீர் குடத்தில் கல் போடுவதற்கா கம்மென்று இருந்தது இந்தக் காக்கை? (3)
9. முதலுதவிக்கா தேடி அலையாதே என்கிறாய்? (5)
12. பணம் பல பெட்டிகளில் இருப்பது உறுதி (2,3)
14. வலம் வருகையில் நெருக்கமானவர் (3, 1)
15. மடை மாற்றிய மேதகு முதல்வருக்கு இரண்டு கொம்பு மட்டும் தான் இல்லை (3)

**இதற்கு விடை இதே பதிப்பில் ஒரு பக்கத்தில் உள்ளது.**

# ரோட்டரி இறைவணக்கம்

## சிந்தனை, மரியாதை மற்றும் சேவையின் ஒரு மரபு.

உலகமெங்கும் உள்ள ரோட்டரி சங்கங்கள், அவர்களது உறுப்பினர்களின் மதிப்புகளை நிலை நிறுத்துவதற்கும், ஊக்கம் அளிப்பதற்கும் மற்றும் ஒற்றுமையை உருவாக்குவதற்கான வார்த்தைகளை பயன்படுத்தி ஒவ்வொரு சந்திப்பையும் ஆரம்பிக்கின்றன, அதுவே ரோட்டரி **Prayer** ஆகும். இந்த நடைமுறை அநேகமாக அனைத்து ரோட்டரி சங்க சந்திப்பு கூட்டங்களிலும் நடைபெறுகிறது. உண்மையில் இது மிக முக்கியமானது. இது உறுப்பினர்களுடனான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும், அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கும், மேலும் அவர்களின் சுய நிலைப்பாட்டை உறுதி செய்வதற்கும் எப்போதும் உதவுகிறது. இதன் மூலம், அவர்கள் தங்கள் குறிக்கோள்களின் அடிப்படையில் இணக்கமாக செயல்படுத்தப்படுவதற்கான ஊக்கம் பெறுகின்றனர். இந்த பாரம்பரியத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பது, நமது கூட்டுறவுகளை மேலும் வலுப்படுத்தி, உறவுகளை மேலும் உறுதிப்படுத்துகிறது.

ரோட்டரி இன்டர்நேஷனல் 1905 ஆம் ஆண்டில் சிகாகோவில் பால் ஹாரிஸ் என்ற இளம் வழக்கறிஞரால் நிறுவப்பட்டதென்பது யாவரும் அறிந்ததே. இந்த அமைப்பு திட்டவட்டமான வகுப்புவாத மற்றும் அரசியல் சாராததாக இருந்தபோதிலும், 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ரோட்டரி பிறந்த சூழலில், பெரும்பாலும் குடியுரிமை மற்றும் சமூக அமைப்புகளின் பிரார்த்தனையை உள்ளடக்கியிருந்தது.

ரோட்டரி அமெரிக்கா மற்றும் வெளிநாடுகளில் வேகமாக பரவியதால், பல சங்கங்கள் தங்கள் கூட்டங்களை ஒரு சுருக்கமான பிரார்த்தனை அல்லது பிரதிபலிப்பு தருணத்துடன் தொடங்கின. இந்த பிரார்த்தனைகள், பொதுவாக குறுகிய மற்றும் மதப்பிரிவு அல்லாதவை, நன்றி, சேவை, பணிவு மற்றும் கூட்டுறவு போன்ற மதிப்புகளில் கவனம் செலுத்துபவையாக இருக்கின்றன.

ரோட்டரி பிரார்த்தனை என்பது ஒரு முறையான வழிபாடோ, கோட்பாடோ மட்டுமல்ல, மாறாக ரோட்டரியின் முக்கிய மதிப்புகளுடன் ஒத்துப்போகும் ஒரு பிரதிபலிப்பு நடைமுறையாகும்.

ரோட்டரி பிரார்த்தனைகள் பெரும்பாலும் சேவை செய்வதற்கான வாய்ப்புக்கு நன்றியைத் தெரிவிக்கின்றன, தெளிவான தலைமைக்கு வழிகாட்டுதல்களைப் பெறுகின்றன, மேலும் சங்கத்தின் பணியை ஒருமைப்பாட்டுடனும் இரக்கத்துடனும் நிறைவேற்ற வலிமையை கேட்கிறது.

ரோட்டரி உலகளாவியது மட்டுமல்ல இனம், மதம்களை கடந்தது . இதனை அங்கீகரிக்கும் வகையில், சில சங்கங்கள் முறையான பிரார்த்தனைகளுக்கு பதிலாக மௌனம், தியான அல்லது மதப்பிரிவு அல்லாத பிரார்த்தனைகளைத் தேர்வு செய்கின்றன. அனைத்து நம்பிக்கைகளையும் கொண்ட உறுப்பினர்கள் தங்கள் நோக்கத்தை வரவேற்கப்படுவதையும் ஒன்றிணைவதையும் உணரும் மரியாதைக்குரிய சூழலை வளர்ப்பதே இதன் குறிக்கோள்.

இது கட்டாயமல்ல என்றாலும், ரோட்டரி பிரார்த்தனையின் பாரம்பரியம் பல ரோட்டேரியர்களுக்கு தொடர்ந்து அர்த்தத்தைத் தருகிறது. வார்த்தைகள், மௌனம் அல்லது கவனத்துடன் இருப்பதன் மூலம் , அது ரோட்டரியின் இதயத்தை பிரதிபலிக்கிறது. ஒருமைப்பாடு, இரக்கம் மற்றும் நோக்கத்துடன் மனிதகுலத்திற்கு சேவை செய்வதற்கான அர்ப்பணிப்பு காலப்போக்கில், அது ஆன்மீக பிரதிபலிப்பை மதிக்கும் விதமும்–அது அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், அர்த்தமுள்ளதாகவும், "சுய நலத்திற்கு மேலான சேவை" என்ற நெறிமுறையில் ஆழமாக வேரூன்றியிருப்பதை உறுதிசெய்கிறது.

# ரோட்டரி அமைப்பின் வழிகாட்டும் தத்துவம்

## "Four Way Test" நான்கு வழி சோதனை

ரோட்டரி இன்டர்னேஷனல், தனிப்பட்ட மற்றும் தொழில்முறை நடத்தைக்கான எளிமையான, ஆழமான ஒழுக்க வழிமுறைகளை வழங்குகிறது. 1943 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்த 24 சொற்கள், உலகளாவிய தலைமை மற்றும் செயல்களில் நேர்மைக்கு ஒரு முக்கியமான ஆதாரமாக இருக்கும். இது ரோட்டரி அமைப்பின் நிலையான மற்றும் சமூக சேவைக்கான ஒரு முக்கிய பங்களிப்பாகும்.

இதில், நான்கு வழி சோதனை எனப்படும் ஒரு குறிப்பிட்ட நடைமுறை உள்ளது, இது ஒவ்வொரு நடவடிக்கையையும் முடிவையும் மதிப்பீடு செய்ய உதவுகிறது. இந்த சோதனை, தனிப்பட்ட மற்றும் சமூகத்தின் நலனுக்காக எதனை செய்கிறோம் , அது எவ்வாறு செயல்படும் என்பதைக் குறிப்பிடுகிறது. இதனால், ரோட்டரி உறுப்பினர்கள் அனைவரும், அவர்களுடைய சமூகத்திற்கும், உலகத்திற்கும் நேர்மையாக நடந்து கொள்பவர்கள் ஆகின்றனர்.

இந்த நான்கு வழி சோதனை, குறிப்பாக உண்மையான மற்றும் பொருத்தமான முடிவுகளை எடுக்க உதவுகிறது, இதனால் அந்த அமைப்பின் அடிப்படையில் உள்ள நெறிமுறைகள் மேலும் உறுதியாக்கப்படுகின்றன. இதனால், ரோட்டரி நிறுவனத்தின் சமூக சேவைகள் மேலும் பல விரிவாக்கம் அடையவும் பயனுள்ளதாகவும் மாறுகின்றன.

1932 ஆம் ஆண்டு, ஹெர்பர்ட் ஜே. டெய்லர் என்ற ஒரு வணிக நிர்வாகி மற்றும் ரோட்டேரியன், சிகாகோவில் உள்ள ஒரு அலுமினியக் கம்பனியை கடுமையான வீழ்ச்சி சூழ்நிலையிலிருந்து மீட்டெடுக்க முன்வந்தார். அந்தகாலகட்டத்தில், பெரும்பாலான தொழில்கள் மந்தம் மற்றும் சிக்கல்களால் பாதிக்கப்பட்டிருந்தன. டெய்லர், ஒரு சில நெறிமுறைகளை பின்பற்றினால் **ethically** சரியாவதோடு மட்டுமல்லாமல், நல்ல வணிக நடைமுறையாகவும் இருக்கும் என்பதை மனதில் வைத்திருந்தார். இதற்கான அடிப்படையாக, அவர் உருவாக்கியது தான் இந்த "நான்கு வழி சோதனை" , ஒவ்வொரு வணிக நடவடிக்கையையும் மேற்கொள்ளும் முன், அதனுடைய விளைவுகளை பரிசீலிக்க உதவுகிறது. இந்த சோதனை, வணிக அமைப்பின் செயல்பாடுகளை உறுதி செய்யவும், அதற்காக வழிகாட்டும் நெறிமுறைகளை அமல்படுத்தி, ஒரு நிலையான மற்றும் மதிப்புமிக்க வணிகத்தை உருவாக்குவதற்கான அடிப்படையை அமைக்கிறது.

1942 ஆம் ஆண்டில், சிகாகோவில் உள்ள ரோட்டரி இன்டர்நேஷனலின் இயக்குநரான ரிச்சர்ட் வெர்னர், ரோட்டரி **Four Way Test** ரோட்டரியின் ஒரு அங்கமாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முன்மொழிந்தார். அவரது பரிந்துரை ஜனவரி 1943 இல் **R.I.** வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டது, மேலும் வொகேஷனல் சேவை திட்டத்தின் ஒரு பகுதியாக மாறியது. இப்போதெல்லாம், இது நமது ரோட்டரியின் பிரதான ஐந்து சேவையின் பிரிவுகளிலும் ஒரு முக்கியமான அம்சமாகக் கருதப்படுகிறது.

ஹெர்ப் டெய்லர் 1954-55 ரோட்டரியின் பொன்விழா ஆண்டின் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக பணியாற்றியபோது **`Four Way Test"** ன் காப்புரிமையை ரோட்டரி இன்டர்நேஷனலுக்கு மாற்றினார்.

நான்கு வழி சோதனை என்பது தேசிய எல்லைகள் மற்றும் மொழி தடைகளைத் தாண்டி சர்வதேச அளவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்கு அரசியல், கோட்பாடு அல்லது மதம் எதுவும் கிடையாது. ஒரு நெறிமுறைக் குறியீட்டை விட, இது ஒவ்வொரு வகையிலும் வெற்றிகரமான வாழ்க்கைக்கான அனைத்து பொருட்களையும் கொண்டுள்ளது. அது இன்றைய காலகட்டத்திலும் சமூகத்தில் மிகச்சிறப்பாக செயல்படுகிறது.

1) **Is it the TRUTH? :**
நீங்கள் என்ன பேசுகிறீர்கள் அல்லது செய்கிறீர்கள், அது உண்மையாக இருக்கிறதா?

2) **Is it FAIR to all concerned? :**
இது அனைவருக்கும் நியாயமான ஒன்றாக இருக்கிறதா ?

3) **Will it build GOODWILL and BETTER FRIENDSHIPS?**
இது அனைவரிடத்திலும் நல்லெண்ணத்தையும், நல்ல நட்பையும் உருவாக்குகிறது?

4) **Will it be BENEFICIAL to all concerned? :**
இது அனைவருக்கும் பயனுள்ளதாகவும், உதவிகரமாகவும் இருக்கிறதா?

# ஜுலை மாத ரோட்டரி தலைப்பு :

## புதுப்பிப்பு, ஆரோக்கியம் மற்றும் நம்பிக்கை.




ஜுலை மாதம், ரோட்டரி மாதங்களில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இது புதிய ரோட்டரி ஆண்டின் ஆரம்பமாக மட்டுமல்ல; மேலும், சேவை, தலைமுறை மற்றும் மனிதாபிமான செயல்களில் புதிய உணர்வுகளை உருவாக்குகிறது. இந்த மாதத்தின் மையக்கருத்து, ரோட்டரியின் முக்கிய நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு, தாய்மார்களும் குழந்தைகளும் ஆரோக்கியமாக வாழ்வதையும் புதிய தலைமுறையின் வளர்ச்சியையும் உள்ளடக்குகிறது . இதன்மூலம், நமது சமூகத்தை மேலும் பரிசுத்தமாகவும் நிலையானதாகவும் உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இது ஒருவரின் மனதில் அன்பு மற்றும் பரிசுத்தம் கொண்ட உலகத்தை உருவாக்குகிறது, இதன்மூலம் மக்கள் மேலும் மனிதாபிமானத்தை உணர்வதற்காக ஒற்றுமையாக செயல்பட முடிகிறது. அதாவது, நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, ஒரு நல்ல சமூகத்தை உருவாக்குவதற்கு முனைப்புடன் இருக்க வேண்டும். இதன் மூலம், நமது சமுதாயத்தில் உள்ள அனைத்து மக்களும் ஆரோக்கியமாக, தெளிவான மனதோடு வாழ எளிதாகவும், பரிசுத்தமாகவும் வலுப்பெறுவார்கள்.

**கர்ப்பிணி மற்றும் குழந்தை ஆரோக்கியம் : ஆரோக்கிய எதிர்காலத்திற்கு அடித்தளம் அமைத்தல்.**

ரோட்டரி இன்டர்நேஷனல், பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை உறுதி செய்வது, சக்திவாய்ந்த மற்றும் வலுவான சமூகங்களை உருவாக்குவதற்கு அடிப்படையாகியதாகக் கருதுகிறது. உலகின் பல பகுதிகளில், நோய்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள், போதிய உணவின்மை, மருத்துவ சேவைகளை அணுகுவதில் உள்ள தடைகள் அல்லது சுகாதார வசதிகளின் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களினால், ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் கணக்கான இளம் குழந்தைகள் மற்றும் பெண்கள் உயிரிழக்கின்றனர். இதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, ரோட்டரி ஜுலை மாதத்தில் தனது உறுதிப்பாட்டினைக் கொண்டு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை உலகளாவிய முன்னுரிமையாக முன்னேற்றுவதில் தனது உறுதியான வலிமையை மீண்டும் வலியுறுத்துகிறது.

உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள், முக்கியமான மருத்துவ சேவைகளை, உணவின் விழிப்புணர்வு, தடுப்பூசி பெறுதல் மற்றும் சுத்தமான நீரை அடைவதற்கான முறைகளை வழங்கும் திட்டங்களை செயல்படுத்துகின்றன. இந்த நடவடிக்கைகள் மருத்துவமனைகள், அரசு மற்றும் சமூக சேவைகளை மேற்கொள்கின்ற அமைப்புகளுடன் இணைந்து வலுப்பெற்றது. இதனால், சுகாதார அடிப்படைவழி மேம்படுகிறது மற்றும் அரசு நிறுவனத்தின் சுகாதாரத் தரப்பினரும் பயிற்சி பெறுகின்றனர். இதன் மூலம், கர்ப்பிணி பெண்கள் தங்கள் பிறப்பு நலன் , குழந்தைகள் தங்கள் ஆரம்ப காலங்களில் உரிய வளர்ச்சியை அடையவும் உறுதி செய்யப்படுகிறது.

ஆரோக்கியமான குடும்பங்கள் உருவாகும் போது, வலிமையான பொருளாதாரங்கள் மற்றும் உறுதியான சமூகங்கள் உருவாக்கப்படுகின்றன. தாய்மார்களின் ஆரோக்கியம் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் முதலீடு செய்வதன் மூலம், உடனடி ஆரோக்கிய சிக்கல்களை மட்டும் சமாளிக்காமல், நீண்டகால நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கும் முயற்சியோடு, சமூகத்தின் அனைத்து தரப்பிலும்

வளர்ச்சி ஏற்படுகிறது. இதற்கான விளைவாக, குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் ஆரோக்கியமாகவும், கட்டமைப்பாகவும் முன்னேற்றம் அடைகின்றன. இதனால், சமுதாயத்தின் மொத்த முன்னேற்றத்திற்கு மிகுந்த ஆதரவு வழங்கப்படுகிறது.

**புதிய தலைமை மாதம் : சேவையின் புதிய பருவத்தை ஊக்குவிப்பது.**

ஜுலை மாதம், ரோட்டரி அமைப்பில் புதிய தலைமை மாதமாகக் கொண்டாடப்படுகிறது. இது உலகின் அனைத்து பகுதிகளில் உள்ள சங்க தலைவர்கள், மாவட்ட ஆளுமைகள் மற்றும் சர்வதேச அதிகாரிகள் ஆகியோரின் நியமனத்தை குறிக்கிறது. இப்படி வருடந்தோறும் நிகழ்ந்துவரும் மாற்றம் வளர்ச்சி, மாறுதல் மற்றும் ரோட்டரி அமைப்பில் தொடர்ந்து உயிரோட்டம் பெறுவதைக் குறிக்கின்றது.

இந்த நிகழ்வு புதிய தலைமைகள் எளிதாக கையாண்டு வரும் புதிய யோசனைகள் மற்றும் முன்மொழிகள் மூலம், அமைப்பின் செயல்பாட்டில் மேலும் முன்னேற்றத்தை அடைய உதவுகிறது.

இதன் மூலம், அந்த அமைப்பின் அனைத்து உறுப்பினர்களுக்கும் புதிய வாய்ப்புகள் உருவாகுகின்றன. மேலும், அவர்கள் தங்களின் திறமைகளை முழுமையாக வெளிப்படுத்துவதற்கான ஏற்ற சூழலை உருவாக்குகின்றது. இவ்வாறு, புதிய தலைமைகளின் குறிக்கோள்களும், சிந்தனைகளும், செயல்பாடுகளும், அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் அமைப்பின் வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றன.

ரோட்டரியில் தலைமைப் பொறுப்பு என்பது அதிகாரத்தை பெறுவதல்ல; அது பார்வை, ஒத்துழைப்பு மற்றும் சேவையின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது. புதிய தலைமைகள், உற்சாகம் நிறைந்த மற்றும் ஆற்றல்மிக்க யோசனைகளை முன்வைக்கிறார்கள். இது, உள்ளூர் மற்றும் உலகளாவிய சமூகங்களின் மாறுபடும் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, குறிக்கோள்களை மீண்டும் ஒருங்கிணைக்க வாய்ப்பு அளிக்கிறது. அவர்கள் சேவையின் ஒரு பாரம்பரியத்தை ஏற்கிறார்கள், அதே சமயத்தில், தங்களின் தனிப்பட்ட அடையாளத்தை வெளிப்படுத்தவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இதன்மூலம், அவர்களால் அமைப்பில் புதுமை மற்றும் நிகழ்வுகளை ஏற்படுத்தி, அனைவருக்கும் நன்மை மீட்டுக்கொடுக்கின்றனர்.

**ஒன்று உயிரைக் கவனித்துக் கொள்கிறது, மற்றொன்று அதன் திசையை வடிவமைக்கிறது.**

ஜுலை மாதத்தில், உலகளாவிய ரோட்டேரியர்கள் புதிய ஆண்டின் சேவையில் ஈடுபட்டுள்ளனர், அவர்கள் தங்கள் சமூகத்திற்குள் மாற்றங்களை உருவாக்கும் திறனை நினைவில் கொள்கின்றனர், குறிப்பாக தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் தேவைகள் உள்ள சமூகம் குறித்தும். தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியம் மற்றும் புதிய தலைமைத்துவத்தை மையமாகக் கொண்டு, இந்த இரட்டை கவனமும் ஒரு சக்திவாய்ந்த ஒத்திசைவை உருவாக்குகிறது:

இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை, சமூகத்திற்குள் மாற்றங்களை உருவாக்கும் நோக்கத்துடனே, வருங்கால தலைமுறைக்கும், அவர்களின் ஆரோக்கியத்திற்கும் தேவையான ஆதாரங்களை வழங்குவதில் ஒரு முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றது. இது தாய்மார்களின் ஆரோக்கியத்திற்கும், குழந்தைகளின் வளர்ச்சிக்கான ஒரு உறுதியான அடித்தளமாகவும் செயல்படுகிறது, மேலும் சமுதாயத்தின் எதிர்காலத்தையும் மேம்படுத்துகிறது.

ஆகையால், இந்த மாதம், ரோட்டேரியர்களுக்கு புதிய தலைமைத்துவம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு மற்றும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் முக்கியமான மாற்றங்களை உருவாக்குவதற்கான ஒரு அபூர்வ வாய்ப்பு கிடைக்கிறது, இது அனைவருக்கும் முன்னேற்றத்தையும் நலனையும் வழங்குமாறு இருப்பதாகும்.

இந்த மாதத்தின் நிகழ்ச்சிகள் மற்றும் நடவடிக்கைகள், நம்மைச் சூழ்ந்துள்ள சவால்களை எதிர்கொள்ள ஊக்கமளிக்கும் வகையில், அனைவரையும் ஒன்றிணைத்துப் பணியாற்றவும் உதவுகின்றன. இதனால், நம் சமூகங்களில் உதவிகரமாக வேலை செய்து, நல்லிணக்கத்திற்கான முயற்சிகளில் ஈடுபட நாம் இக்கடமையை எடுத்துக்கொள்கிறோம்.

# District Officers Learning Seminar

## "சக்கர வியூகம்"

2025-26 ஆண்டிற்கான மாவட்ட பொறுப்பாளர்களுக்கான பயிற்சி அரங்கம் சக்கர வியூகம் "DOLS" என்ற பெயரில் மே 10, 2025 அன்று கொங்கு திருமண மாளிகை, மோகனூரில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக **RI Dist 3212** முன்னாள் மாவட்ட ஆளுநர் டாக்டர் ஷேக் சலீம் அவர்களும் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி.எஸ். மாதேஸ்வரன் அவர்களும், பத்திரிகையாளரும் நியூஸ் 18 தலைமை திரு. கார்த்திகை செல்வன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

ரோட்டரி மாவட்ட அதிகாரிகள் கற்றல் கருத்தரங்கு **District Officers Learning Seminar** என்பதாகும், எதிர்வரும் மற்றும் தற்போதைய மாவட்ட மற்றும் சங்க தலைவர்களை ரோட்டரிக்குள் தங்கள் பாத்திரங்களை திறம்பட வழிநடத்த தேவையான நுணுக்கங்கள் மற்றும் திறன்களுடன் வடிவமைக்கப்பட்ட ஒரு பயிற்சி நிகழ்வாகும் . மாவட்ட சங்கங்கள் மற்றும் மாவட்டங்களின் வெற்றியை உறுதி செய்வதற்கும், ரோட்டேரியன்களுக்கு தொடர்ந்து பயிற்சி மற்றும் ஆதரவை வழங்குவதற்கும் இந்தக் கருத்தரங்கு மிக சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வை நாமக்கல் டிரான்ஸ்போர்ட் ரோட்டரி சங்கம் மற்றும் சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மிகச்சிறப்பாக நடத்தி கொடுத்தனர்.











# District Learning Assembly & District Grants Seminar

## “அரசவை”

நமது ரோட்டரி மாவட்டத்தின் அரசவை **“District Learning Assembly & District Grants Seminar”** பயிலரங்க கருத்தரங்கம் **Excel Conventional Hall'**-ல் மிகவும் பயனுள்ள நிகழ்வாக நடைபெற்றது. இந்த பிரமாண்ட நிகழ்வை ஓசூர் ஏஞ்சல்ஸ் சங்கத்தினர் மிக சிறப்பாக நடத்தினர், சிறப்பு விருந்தினராக திரைப்பட நடிகர் தாமு அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். மேலும் **DG, PDG, DGE, DGN,** மற்றும் மாவட்ட அலுவலர்கள் தலைமை ஏற்றனர்.

இதில் மாவட்ட பொறுப்பாளர்கள், மண்டல தலைவர்கள் மற்றும் தலைவர் தேர்வு, வரவிருக்கும் ஆண்டிற்கான ரோட்டரியின் திட்டங்கள், முன்முயற்சிகள் மற்றும் தலைமைத்துவ மேம்பாடு பற்றி அறிந்துகொள்ள ஒன்றுகூடி பயிற்சி மற்றும் தெளிவு பெற்றனர். இதில் பொதுவாக பயிற்சி அமர்வுகள், பிரேக்அவுட் விவாதங்கள் மற்றும் பிற சங்க உறுப்பினர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்களுடன் இணையும் வாய்ப்புகளை அமைந்தது.

அதே நாளன்று ரோட்டரி மானிய மேலாண்மை கருத்தரங்கும் **(Grants Management Seminar)** நடைபெற்றது. இதில் சங்கங்களுக்குக்கான மானியங்களை, குறிப்பாக ரோட்டரி அறக்கட்டளையின் மானியங்களை எவ்வாறு திறம்பட நிர்வகிப்பது என்பது கற்றுக்கொடுக்கப்பட்டது. மாவட்ட மற்றும் உலகளாவிய மானியங்கள் போன்ற ரோட்டரியின் மானியத் திட்டங்களில் பங்கேற்க விருப்பம் உள்ள சங்கங்களுக்கு இந்தக் கருத்தரங்கு மிக பயனுள்ளதாக இருந்தது.












DISTRICT MEMBERSHIP DEVELOPMENT SEMINAR
ROTARY INTERNATIONAL DISTRICT 2982
Rotary
UNITE FOR GOOD
TEAM UNIQUE
Rtn. Francesco Arezzo
RI President
Rtn. Er. P. Sivasundaram
District Governor
17
August 2025
Organised by ROTARY CLUB OF SALEM EVERGREEN
Venue : Thongum Poonga Pallnokku Arangam,
Near Mulluvadi Gate, Salem - 636 007.
Rtn. Dr. R. Rajesh
District Membership
Development Chairman
RID 2982, 2025-26




Rotary
Lead25
Rtn. Francesco Arezzo
RI President
We invite all Rotarians, Rotaractors & Interactors to
HOUSE OF FRIENDSHIP
ROTARY INDIA LEADERSHIP CONCLAVE
Save the Date
23rd - 24th August, 2025
Chennai Trade Centre, Nandambakkam, Tamil Nadu
Rtn AKS Er Muruganandam M (MMM)
Rotary International Director 2025-27
Convenor - Lead 25 RILC
Rtn AKS Flt Lt KP Nagesh
Rotary International Director 2025-27
Co-Convenor - Lead 25 RILC
PDG Rtn Muthupalaniappan
RI District - 3234
Chairman - Pre-Lead 25
Register Now
www.lead25rilc.org




Rotary
Lead25
Inaugural Chief Guests
Thiru Udhayanidhi Stalin
Hon'ble Deputy Chief Minister of Tamil Nadu
Rtn. Francesco Arezzo
RI President 2025 - 26
Thiru Anbil Mahesh Poyyamozhi
Hon'ble Minister for School Education of Tamil Nadu
23RD & 24TH August, 2025
Chennai Trade Centre, Nandambakkam, Tamil Nadu
Register Now



Rtn. Major Donor **S. Suresh Kumar**
Chairman, PELS & SELS 2025 &

Gurukulam
PELS & SELS 2025
*We Learn... We Change*

**6,7,8 & 9 March 2025**
**AR Thanga Kottai, Yelagiri**

*Organised by*
**Rotary Club of Namakkal Poultry Town**

# நமது ரோட்டரி மாவட்டம் 2982-ன் PELS & SELS நிகழ்வுகளில் சில புகைப்படங்கள் உங்களின் பார்வைக்கு....












Vision 2025 - 26


Dist. 2982














Dist. 2982
Mário César Martins de Camargo
UNITE


UNITE FOR GOOD
UNIQUE
UNITE




UNITE
FOR


UNITE
FOR

















# International Assembly @ Orlando, US

உலகின் மிகப்பெரிய ரோட்டரி பயிலரங்கத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியானது. இது 2025-26 ஆண்டிற்கான உலகளாவிய ரோட்டரி மாநாடு ஆகும்.

ரோட்டரி இன்டெர்னஷனலின் மண்டலம் ஐந்திற்கான மாவட்ட ஆளுநர் தேர்வு பயிற்சி என்பதே **GELS**, மாவட்ட ஆளுநர்களாக அவர்களது பொறுப்புகளை ஒத்துழைக்க தயார்படுத்தும் ஒரு விரிவான நிகழ்வாகும். இதில், ரோட்டரியின் அமைப்பு, கொள்கைகள் மற்றும் நோக்கங்களை புரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. மேலும், தலைமைத்துவ திறன்களை மேம்படுத்துவதோடு, சங்கங்கள் மற்றும் மாவட்டத்தினை ஊக்குவிக்க தேவையான உத்திகளை உருவாக்குவதற்கும் கவனம் செலுத்தப்பட்டது. இந்த பயிற்சி எதிர்வரும் என்னைப்போன்ற ஆளுநர்களுக்கு, ஆரோக்கியமான சங்கங்களை உருவாக்குவது, மாவட்ட இலக்குகளை அமைப்பது மற்றும் உறுப்பினர்களை செயல்பாட்டுக்கு ஊக்குவிப்பது போன்ற விஷயங்களின் நுணுக்கங்களை தெரிந்துகொள்ள முடிந்தது. அதுமட்டுமின்றி ஆளுநர்கள் தங்கள் மாவட்டங்களை முன்மாதிரியான மாவட்டமாக மாறுவதற்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குவதோடு, திட்டமிடப்பட்ட கூட்டங்கள் மற்றும் பரிமாற்றங்களை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் வழங்கியது. இது உண்மையில் ஒரு உலகளாவிய அனுபவமாக இருந்தது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வந்த பேச்சாளர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்தனர். சக மாவட்ட ஆளுநர்களுடன் உரையாடுவதன் மூலம், புதிய யோசனைகளை ஆராய்வதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் நாங்கள் முழுமையாக பயன்படுத்திக்கொண்டோம். எனது அனுபவங்களைப் சபையில் ரத்தினச்சுருக்கமாக பகிர்ந்தேன், உறுப்பினர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும், மாற்றங்களை எவ்வாறு முகாமையிட வேண்டும், மற்றும் ரோட்டரி உலகத்தின் அடிப்படையில் எவ்வாறு தாக்கத்தை உருவாக்கலாம் என்பதையும் விளக்கினேன். மேலும், மற்றவர்களிடமிருந்து பல புதிய கற்றல்களைப் பெற்றேன்!

பின்னர், வந்திருந்த அனைத்து தேர்வு ஆளுநர்களையும் சிறு சிறு குழுக்களாக தொகுத்தனர்.

எங்கள் குழுவுடன் நான் இணைந்து பெற்ற அனுபவங்களைப் பயன்படுத்தி, அந்நிகழ்வு முடிவடைந்த பிறகு நீண்டகாலம் நிலைத்திருக்கும் முக்கியமான சர்வதேச உறவுகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு மற்றும் அதன் பலன்களை அனுபவிக்கப்பெற்றேன்.



























Rotary


NASA

Rotary
ONE ROTARY CENTER



# தப்பு தப்பா சமையல் செஞ்சாலும் தப்பிக்க

# 5 சமையல் குறிப்புகள்



இல்லத்தரசிகள் யாருமே சமையலில் தெரிந்தே தவறு செய்வது கிடையாது. எதிர்பாராமல் செய்த தவறுகளை சரி செய்யவும், சமையலில் தெரியாத சில புத்தம் புது ஐடியாக்களை தெரிந்து கொள்ளவும் எளிமையான 5 சமையல் குறிப்புகள் இந்த பதிவில் உங்களுக்காக கொடுக்கப்பட்டுள்ளது. தேவைப்படுபவர்கள் பதிவை படித்து பலன் பெறலாம். உங்களுக்கு சமையலே தெரியாது என்றாலும் இதை தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். ஏதாவது ஒரு காலத்தில் பயன்படும்.

**குறிப்பு 1 :**

உளுந்து வடை செய்ய மாவு அரைக்கும் போது, நீர்த்துப் போய்விட்டதா அதில் கொஞ்சம் அவல் சேர்த்து சிறிது நேரம் ஊற வைத்து பின்பு வடை தட்டி பாருங்கள். வடை மொறுமொறுப்பாகவும் எண்ணெய் குடிக்காமலும் சூப்பராகவும் வரும்.

**குறிப்பு 2 :**

காலையில் அரைத்த தேங்காய் சட்னி மீதமாகி விட்டதா. அதில் கொஞ்சம் புளிக்காத தயிர், பொடியாக நறுக்கிய வெங்காயம், கார பூந்தி சிறிதளவு சேர்த்து கொஞ்சமாக உப்பு போட்டு, கொத்தமல்லி தழை தூவி, கலந்து மதிய சாப்பாட்டுக்கு பரிமாறினால் சூப்பராக இருக்கும்.

**குறிப்பு 3 :**

எந்த வருவல் செய்வதாக இருந்தாலும் கடாயில் எண்ணெய் ஊற்றி சூடு செய்வோம். அந்த சூடான எண்ணெயில் கொஞ்சமாக சர்க்கரை சேர்த்து, பிறகு காய்கறிகளை சேர்த்து வறுவல் செஞ்சு பாருங்க டேஸ்ட் சூப்பரா இருக்கும்.

**குறிப்பு 4 :**

சில சமயம் கிழங்குகளை வேக வைக்கும் போது அது எளிதில் வேகாது. எந்த வகை கிழங்காக இருந்தாலும் அதை 10 நிமிடங்கள் கல்லுப்பு சேர்த்து தண்ணீரில் ஊற வைத்துவிட்டு, பிறகு வேக வைத்து பாருங்கள் பஞ்சு போல வேகம்.

**குறிப்பு 5 :**

சீரகம், ஓமம், மிளகு இது மூன்றையும் சம அளவு எடுத்துக்கோங்க. லேசாக கடாயில் வறுத்து இதோடு கொஞ்சம் சுக்குப்பொடி, கொஞ்சம் பெருங்காய பொடி சேர்த்து அரைத்து ஒரு பாட்டிலில் ஸ்டோர் செய்து வைத்துக் கொள்ளுங்கள். எந்த சுண்டல் செய்யும் போதும், தாலிக்கும்போது இந்த பொடியை தேவையான அளவு போட்டு சுண்டல் தாளித்துக் கொடுத்தால் வாயு தொல்லை, வயிறு உப்புசம், ஜீரண கோளாறுகள் போன்ற பிரச்சனைகள் வரவே வராது.

**Rtn. P. Sakthi Srinivasan**
**RC Idappadi**

**இது போன்ற வீட்டு குறிப்புகளை தாங்களும் இப்பகுதியில் பகிரலாம்...**

# ஆன்மீகத்தைப் புரிந்துகொள்ள

## "நமக்குள் ஒரு பயணம்"



ஆன்மீகம் என்பது ஒரு ஆழ்ந்த தனிப்பட்ட மற்றும் பெரும்சக்தியாய் உருமாறும் பயணமாகும், இது தனிநபரை தங்களை விட சக்திவாய்ந்த ஒன்றுடன் இணைக்க முயல்கிறது. இந்த "சக்தி" பல வழிகளில் புரிந்து கொள்ள முடியும்-கடவுள், பிரபஞ்சம், உள் அமைதி அல்லது வாழ்க்கையின் சாராம்சம்.

பாரம்பரியமாக மதத்துடன் தொடர்புடையதாக இருந்தாலும், ஆன்மீகம் இன்று முறையான நம்பிக்கை அமைப்புகளுக்கு அப்பால் விரிவடைகிறது, இது சுய விழிப்புணர்வு, நோக்கம் மற்றும் இணைப்புக்கான பல்வேறு பாதைகளை உள்ளடக்கியது.

**சரி ஆன்மீகம் என்றால் என்ன?**

ஆன்மீகம் என்பது பொருள், நோக்கம் மற்றும் அமைதியை பின்தொடர்வதாகும். இது வாழ்க்கையின் அருவமான அம்சங்களை ஆராய்வதை உள்ளடக்கியது-இருப்பு பற்றிய கேள்விகள், யதார்த்தத்தின் தன்மை மற்றும் பிரபஞ்சத்தில் ஒருவரின் இடம்.

பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட கோட்பாடு அல்லது நடைமுறைகளின் தொகுப்பைப் பின்பற்றும் மதத்தைப் போலல்லாமல், ஆன்மீகம் மிகவும் திரவமாகவும் தனிப்பட்டதாகவும் இருக்கிறது. மௌனத்தில், இயற்கையில், உறவுகளில் அல்லது துன்பத்தில் கூட அதை அனுபவிக்க முடியும்.

அதன் மையத்தில், ஆன்மீகம் பெரும்பாலும் பின்வருவனவற்றை உள்ளடக்கியது;

பொருள் அல்லது உயர்ந்த நோக்கத்திற்கான தேடல்,உள் அமைதி அல்லது முழுமையின் உணர்வு ,மற்றவர்களுடனும் பிரபஞ்சத்துடனும் தொடர்பு, இரக்கம், நன்றியுணர்வு மற்றும் அன்பு போன்ற மதிப்புகளுடன் ஒரு சீரமைப்பே ஆன்மீகம் என்றும் சொல்லலாம்.

**ஆன்மீகமும் மதமும்.**

இவை இரண்டும் நெருங்கிய தொடர்புடையது என்றாலும், ஆன்மீகமும் மதமும் ஒரே மாதிரியானவை அல்ல. மதம் பொதுவாக ஒழுங்கமைக்கப்பட்ட சடங்குகள், வேதங்கள் மற்றும் பகிரப்பட்ட நம்பிக்கைகளை உள்ளடக்கியது. மறுபுறம், ஆன்மீகம் மதக் கூறுகளை உள்ளடக்கியிருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். இது தனிப்பட்ட அனுபவத்தையும் சத்தியத்திற்கான தனிப்பட்ட பாதைகளையும் வலியுறுத்துகிறது. உதாரணத்திற்கு ஒரு மதவாதி பிரார்த்தனை மற்றும் வழிபாட்டின் மூலம் ஆன்மீகத்தைக் காணலாம் அதுவே ஒரு மதம் சாராத நபர் தியானம், கலை அல்லது நினைவாற்றல் மூலம் அதைக் காணலாம்.

**ஆன்மீகத்தை புரிந்துகொள்ள சில நடைமுறைகள்**

மக்கள் தங்கள் நம்பிக்கைகள் மற்றும் தேவைகளைப் பொறுத்து ஆன்மீக நடைமுறைகளில் ஈடுபட பல வழிகள் உள்ளன.

- ✦ தியானம் மற்றும் நினைவாற்றல்-உள் விழிப்புணர்வையும் நிகழ்கால வாழ்க்கையையும் வளர்க்கும் நடைமுறைகள்.
- ✦ பிரார்த்தனை-தெய்வீக அல்லது ஒருவரின் உயர்ந்த சுயத்துடன் தொடர்புகொள்வது.
- ✦ யோகா-பண்டைய இந்திய தத்துவத்தில் வேரூன்றிய உடல், மன மற்றும் ஆன்மீக ஒழுக்கம்.
- ✦ சிந்தனை மற்றும் தனிமை-ஆழமான பிரதிபலிப்பு அல்லது அமைதிக்கு நேரம் எடுத்துக்கொள்வது.
- ✦ இரக்கத்தின் செயல்கள்-ஆன்மீக வளர்ச்சிக்கான பாதையாக அன்பையும் கருணையையும் வெளிப்படுத்துதல்.
- ✦ இயற்கையுடன் தொடர்பு-இயற்கை உலகில் தெய்வீகத்தையும் அமைதியையும் கண்டறிதல்.

**ஆன்மீகம் பற்றிய நவீன கண்ணோட்டங்கள்**

இன்றைய உலகில், ஆன்மீகம் நல்வாழ்வுக்கு இன்றியமையாததாக பெருகிய முறையில் கருதப்படுகிறது. ஆன்மீக நடைமுறைகள் மன அழுத்தத்தைக் குறைக்கலாம், மன ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம் மற்றும் பரஸ்பரத்தை வளர்க்கலாம் என்று ஆய்வுகள் காட்டுகின்றன.

உளவியல், தலைமைத்துவம், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளிலும் ஆன்மீகம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

"ஆன்மீக ரீதியான ஆனால் மதச்சார்பற்ற" தனிநபர்களின் எழுச்சி தனிநபர் கோட்பாட்டை விட தனிப்பட்ட அர்த்தத்திற்கான வளர்ந்து வரும் விருப்பத்தை பிரதிபலிக்கிறது.

பலர் பாரம்பரியங்களின் கலவையின் மூலம் அல்லது தங்கள் மதிப்புகளுடன் இணைந்த தங்கள் சொந்த நடைமுறைகளை உருவாக்குவதன் மூலம் ஆன்மீகத்தைத் தேடுகிறார்கள்.

**ஆன்மீகப் பாதையின் சவால்கள்**

ஆன்மீகப் பயணம் எப்போதும் அமைதியாகவோ அல்லது எளிதாகவோ இருக்காது. இது பெரும்பாலும் பின்வருவனவற்றை உள்ளடக்கியது;

- ✦ தனக்குள் உள்ள அச்சங்கள் அல்லது கடந்த கால காயங்களை எதிர்கொள்வது
- ✦ அகங்காரத்தையும் கட்டுப்பாட்டையும் விட்டுவிடுதல்
- ✦ நிச்சயமற்ற தன்மையைத் தழுவுதல்
- ✦ துன்பங்கள் நிறைந்த உலகில் இரக்கத்துடன் வாழ கற்றுக்கொள்வது

இந்த சவால்கள் முறியடிப்பது வளர்ச்சியின் ஒரு பகுதியாகும். அவை ஆழமான விழிப்புணர்வு, ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் மாற்றத்திற்கு வழிவகுக்கின்றன.

இறுதியில் ஆன்மீகம் என்பது நமக்குள்ளும், மற்றவர்களுடனும், பிரபஞ்சத்துடனும் அல்லது தெய்வீகத்துடனும் உள்ள தொடர்பைப் பற்றியது. இது வாழ்க்கையின் ஆழமான கேள்விகளைப் புரிந்துகொள்வதற்கும், அதிக இருப்பு மற்றும் நோக்கத்துடன் வாழ்வதற்கும் ஒரு பாதையை வழங்குகிறது. மதம் அல்லது மிகவும் தனிப்பட்ட பயணத்தின் மூலம், ஆன்மீகம் திறந்த இதயத்துடனும் விழித்தெழுந்த மனதுடனும் இருப்பின் மர்மத்தை ஆராய நம்மை அழைக்கிறது.

# AG's Ice Breaking
## @ Yercaud

ரோட்டரி 2982 மாவட்டத்தில் ஒரு புதிய முயற்சியாக உதவி ஆளுநர்கள் மற்றும் மாவட்ட பொறுப்பாளர்களிடையேயான உறவை வலுப்பெற, நட்பினை உருவாக்க மற்றும் அனைவரிடமும் எளிதில் பழகிட நமது மாவட்ட ஆளுநர் அவர்கள் ஒரு சிறப்பான ஒருங்கிணைப்பை நடத்தினார் அதுவே **"ICE Breaking"**.

இந்நிகழ்வு ஏற்காட்டில் கடந்த செப்டம்பர் மாதம் 16 ஆம் தேதி அன்று மூன்று நாட்கள் நடைபெற்றது. இதில் நமது மாவட்ட முன்னாள் ஆளுநர்கள் கலந்து கொண்டு, உதவி ஆளுநர்களிடையே ஒரு புரிந்துணர்வை உருவாக்கி, அதன் மூலம் அவரவர் பொறுப்பில் இருக்கும் சங்கங்கள் சிறந்த யோசனைகள், கலந்தாய்வுகள், புதிய முயற்சிகள் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட பயிற்சி மற்றும் திட்டங்களை வகுக்கும் யுக்திகளை பயிற்றுவித்தனர்.












# District Membership Development
# "Regional Meet"


**Dr. R. Rajesh,**
District Membership Development Chair




ரோட்டரி நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம்.

கடந்த மாதம் நமது 2982 மாவட்டத்திற்குட்பட்ட சங்கங்களின் இணைத்த **Membership Development Regional Meet** இனிதே நடந்தது. நமது **RI** மற்றும் மாவட்ட ஆளுநரின் மையக்கூற்றாக **Membership Development** இருப்பதால், மாவட்ட ஆளுநர் மற்றும் என்னுடைய தலைமையில், உறுப்பினர் சேர்க்கையில் சில சாராம்சங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் கீழ் வருமாறு :

## RI DIST 2982 MEMBERSHIP GOALS

| | |
|---|---|
| 1 | MEMBER SPONSOR : CERTIFICATE |
| 2-5 | MEMBER SPONSOR : CERTIFICATE WITH PIN |
| 5-10 | MEMBER SPONSOR : ALL ABOVE + SEMINAR HONORING |
| 10-20 | MEMBER SPONSOR : ALL ABOVE + CONFERENCE HONORING |
| 20+ | MEMBER SPONSOR : ALL ABOVE + PHF + INTERACTION WITH RI PRESIDENT or RI DIRECTOR |

## MEMBERSHIP CHALLENGE

**START 1 NEW CLUB**



(1 PHF to GSR)

**25+ New Member Sponsor**



(1 PHF to Club President)

## DISTRICT MEMBERSHIP SOCIETY

RI DISTRICT 2982 PHMS PAUL HARRIS MEMBERSHIP SOCIETY

with RI President / RI Director Signed Sponsor Award Certificate

**Eligible :**
Minimum 2 Members Sponsors

## SALEM REGION

Date : 08-06-2025 Sunday
Venue : Hotel Windsor Castle, Rajaji Road, Salem.



## NAMAKKAL REGION

Date : 19-06-2025 Thursday
Venue : RC Namakkal Poultry Town Rotary Hall, Namakkal.



## KALLAKURICHI REGION

Date : 24-06-2025 Tuesday
Venue : Kallakurichi Rotary Hall, Kallakurichi.



## HOSUR REGION

Date : 25-06-2025 Wednesday | TIME : 6.30 p.m.
Venue : TGI Grand Fortuna, Krishnagiri Main Road, Hosur,



# மாவட்ட ஆளுநரின் இலக்கு "GOALS"




1. ரோட்டரி **Convention Centre** கட்டிடம் எழுப்புதல்
2. சிஎஸ்ஆர் மானிய நிதியை கொண்டு நாமக்கல்லில் இரத்த வங்கி, டயாலிசிஸ் மற்றும் ஸ்கேனிங் மையம் அமைத்தல்.
3. மாவட்டம் முழுவதும் 20 டயாலிசிஸ் இயந்திரங்கள் நிறுவுதல்
4. RI மண்டலம் 5 வளையத்தில் ஷாப்பிங் செய்யும் ரொட்டேரின்களுக்கு தள்ளுபடி பெற ப்ரிவிலேஜ் கார்டு திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.
5. மாவட்டம் முழுவதும் மருத்துவ முகாம்களை நடத்த உயர்மட்ட மருத்துவமனைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தல் (Dharan, GEM & Royal Care Hospitals)
6. உயரிய தொழில்நுட்பத்தில் தயார் செய்த செயற்கை கால்கள் (Artificial Limb) முகாம் நடத்தப்படும்.
7. மாநில மாற்றுத்திறனாளிகள் சங்கத்துடன் இணைந்து அவர்களை அடையாளம் கண்டு "சுயம்வரம்" ஏற்பாடு செய்தல்.
8. தினமும் காலை 6:30 மணி முதல் காலை 7:30 மணி வரை ஆன்லைன் யோகா வகுப்புகள் நடத்தப்படும்.
9. சங்கங்கள் குளோபல் க்ராண்ட் திட்டங்களுக்கு பதிலாக CSR நிதி திட்டங்களை செய்ய ஊக்குவித்தல்.
10. பள்ளி மாணவர்களுக்கு மண்டல அளவிலான RYLA மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு மாவட்டங்கள் இடையேயான/மாநில/சர்வதேச RYLA நடத்துதல்.
11. இளம் தலைமுறையினருக்கு போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வு திட்டம்.
12. கிராமப்புற நகரங்களில் 23 புதிய சங்கங்களை தொடங்கி, உறுப்பினர்களை 20% அதிகரித்து, மொத்தம் 2,500 உறுப்பினர்களை இலக்காகக் கொண்டு செயல்படுதல்.
13. சேலம், ஓசூர் மற்றும் நாமக்கல்லில் வேலைவாய்ப்பு முகாம் மற்றும் சில்லறை விற்பனை கண்காட்சியை நடத்துதல்.
14. ரோட்ராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்களுடன் இணைந்து கின்னஸ் உலக சாதனை மற்றும் லிம்கா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸை அமைக்க முயற்சி செய்தல்.
15. APF-க்காக $300,000 திரட்ட உறுப்பினர்களை ஊக்குவிக்கவும். TRF-க்கு மொத்தம் 1 மில்லியன் டாலர் பங்களிப்பை இலக்காகக் கொண்டு முன்னேறுதல்.
16. MIYAWAKI FOREST திட்டத்தை செயல்படுத்தி சங்கங்களை கௌரவிக்கும் விதமாக மாவட்ட ஆட்சியரிடம் விருது பெறுதல்.
17. சங்கங்களுக்கு நிதி திரட்டும் திட்டங்களை ஊக்குவித்தல்.
18. இயற்கை வேளாண்மையை பின்பற்றி, பசுமை வேளாண்மைக்கு பங்களிக்கும் விவசாயிகளை கௌரவித்தல்.



# Assistant Governor's

## "Pre Zone Meet"

நமது மாவட்ட துணை ஆளுநர்கள் அனைவரும் Pre-Zone Meet தலைவர்கள், செயளாலர்கள் மற்றும் Zone-ல் உள்ள அனைத்து பொறுப்பாளர்களையும் அழைத்து சிறப்பாக நடத்தியுள்ளனர். நமது மாவட்ட ஆளுநரின் இலக்குகளை எடுத்துரைத்து, மாவட்டத்திற்கு தேவையான அனைத்தும் செய்ய உறுதி கொண்டு, சிறப்பான பயிற்சியினையும் வழங்கியுள்ளனர்.



Zone - 01



Zone - 02



Zone - 06



Zone - 07



Zone - 08



Zone - 09



Zone - 10



Zone - 11



Zone - 13



Zone - 20



Zone - 21



Zone - 22



Zone - 23

# Assistant Governor's Training Seminar
# "PASARAI"

**PASARAI 1.0** | **Date : 15-11-2024** | **Venue : Value Lanes, Bangalore**
















## PASARAI 2.0

**Date : 10-12-2024** **Venue : Excel College, Komarapalyam**











## PASARAI 3.0

**Date : 18-04-2025** **Venue : Lake View Resort, Poolampatti**
























Rotary

# கேள்வி களஞ்சியம்




கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான பதிலை டிக் செய்து 9894698936 இந்த எண்ணிற்கு **Whatsapp** செய்வோர் அடுத்த இதழில் அவர்களின் புகைப்படத்துடன் ''வெற்றி வாசகர்'' என்று கௌரவிக்கப்படுவர்.

1. தற்போது பதவியேற்றுள்ள **RI President** எந்த நாட்டை சேர்ந்தவர்
   1) இந்தியா 2) அமெரிக்கா 3) சீனா 4) இத்தாலி
2. நமது 2982 மாவட்ட ஆளுநர் கிராம புறங்களில் எத்தனை புதிய சங்கங்கள் நிறுவ இலக்கு நிர்ணயித்துள்ளார் ?
   1) 2 2) 10 3) 23 4) 16
3. தினமும் காலை 6:30 மணி முதல் காலை 7:30 மணி வரை ஆன்லைனில் என்ன வகுப்புகள் நடத்தப்படும்
   1) யோகா 2) கிரிக்கெட் 3) பேச்சு 4) சமையல்
4. இந்த 2025-26 ஆண்டில் நமது 2982 மாவட்டத்தில் மொத்தம் எத்தனை உதவி ஆளுநர்கள் உள்ளனர்
   1) 12 2) 23 3) 32 4) 10
5. மாவட்ட ஆளுநர் **Rtn. P. Sivasundaram** பதவி ஏற்ற தேதி என்ன
   1) 23-June 2) 1-July 3) 2-July 4) 1-June
6. 2025-26 நமது 2982 மாவட்ட மாநாடு எந்த ஊரில் நடக்கவுள்ளது
   1) சேலம் 2) சென்னை 3) மஹாபலிபுரம் 4) பாண்டிச்சேரி
7. நடக்கவிருக்கும் Membership Development Seminar'க்கு வைக்கப்பட்டுள்ள பெயர் என்ன
   1) சிற்பி 2) களம் 3) சங்கல்பம் 4) அழகோவியம்
8. 2982' வின் இந்த வருடத்திற்கான Publication Chair யார்
   1) Rtn. Hemanath 2) Rtn. Shanavas 3) Rtn. So. Kannan 4) Rtn. Madhu

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகள் அனைத்தும் இந்த இதழில் இருந்தே எடுக்கப்பட்டவை**

## குறுக்கெழுத்து போட்டிக்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கா[1] | த[2] | ல் | க | தை[3] | | மு[4] | | ப[5] |
| | ன் | | | மா[6] | லை | க் | க | ண் |
| | மை | | | த | | கோ | | பு |
| | யா | | நா[7] | ம் | கா[8] | ண | | |
| ம் | ன | த[9] | வ[10] | | க[11] | ம் | ப[12] | ளி |
| | | வி[13] | ல் | வ[14] | ம் | | ண | |
| ம[15] | | க் | | ல | | | ப | |
| த[16] | ற் | கா | த் | து | | | ல | |
| கு | | தே | | கை[17] | வீ | ச | ம் | மா |



ROTARY INTERNATIONAL DISTRICT 2982

Rotary | UNITE FOR GOOD | TEAM UNIQUE 2025-26



Rtn. Paul Harris
Founder of Rotary



Rtn. Francesco Arezzo
RI President



Rtn. Er. P. Sivasundaram
District Governor



Rtn. AKS. Prof. Dr. A.K. Natesan
Chairman



Rtn. K. Sivakumar
President



Rtn. C. Panneerselvam
Secretary

## ROTARY INTERNATIONAL DISTRICT 2982

# PROPOSED CONVENTION CENTRE

**Location : Sankagiri**

| Rupees 10 Lakhs | Rupees 5 Lakhs | Rupees 2 Lakhs | Rupees 1 Lakh |
|---|---|---|---|
| Foundation Trustee | Executive Trustee | Trustee | Member |





Rotary
Dist.2982
TEAM UNIQUE
ரோட்டரி மாவட்ட மாநாடு 2025
அழகோவியம்
2982 ரோட்டரி மாவட்ட மாநாடு 2025
Organised by...
ROTARY CLUB OF KOMARAPALAYAM
DATE
26, 27, 28
DECEMBER 2025
FOUR POINTS
BY SHERATON
RESORT & CONVENTION CE
MAHABALIPURAM
REGISTER NOW
https : //rotary2982.org/conference_registration/
Rtn. Paul Harris
Founder of Rotary
Rtn. Francesco-Arezzo
Rotary International President, 2025 - 26
Rtn. Er. P. Sivasundaram
District Governor, 2025 - 26
Rtn. Minnal N. Kandasamy
Conference Chairman
Rtn. Dr. N. Mathan Karthick
Conference Secretary
Advisors
Rtn. K. Inbaraj
Rc of Salem Central
Rtn. D. K. Sivakumar
Rc of Salem South
Rtn. R.R. Prasad
Rc of Redrock
Rtn. K. P. Saravanan
Rc of Namakkal Heritage
Conference Promotion Committee
Rtn. S. Sureshkumar
RC of Namakkal Poultry Town
Chairman
Rtn. C. Sampathkumar
RC of Jalakandapuram
Regional Chairman
Rtn. D. Rajkumar
RC of Namakkal Transport City
Regional Chairman
Rtn. N. Sudhakaran
RC of Sankarapuram
Regional Chairman
Rtn. Dollars Manjunath
RC of Hosur Midtown
Regional Chairman
Rtn. T. Eswarakumar
RC of Salem
Regional Chairman
Conference Registration Committee
Rtn M. Viswanathan
RC of Mohanur
Chairman
Rtn S.Jaiganesh
RC of Tiruchengodu Redrock
Regional Chairman
Rtn. C. Sengottuvelu
RC of Namakkal Evergreen City
Regional Chairman
Rtn. J. Natarajan
RC of Chinnasalem
Regional Chairman
Rtn. R. Sudharsan
RC of Hosur Sipcot
Regional Chairman
Rtn. M.Kesavaraj
RC of Salem Phoenix
Regional Chairman




Owned, Published & Printed by **P.JAGADEESH** Published from NO.11/16, CALICUT MAIN ROAD, NALLAPPAN THOTTAM, JARI KONDALAMPATTY, SALEM,TAMIL NADU - 636010
Printed at **SEAMAN GRAPHICS,** 7/253,K.V.N. Puram 2nd Street, Kilpauk Garden, Chennai - 600010.
Editor : **P.JAGADEESH**

# STAY & Meeting @ SALEM

SELVAMATHI
FARM RESORTS

Rotary

RMB

# Selvamathi Farm Resorts

✦ Meeting Hall ✦ Luxury Rooms ✦ Swimming Pool ✦ Loving Pets ✦ Natural Studio
✦ Rainshower ✦ Party Lawn ✦ Village huts ✦ 250 Varieties of Trees








Masinaikenpatti (PO), Ayothiyapattanam (Via), Salem-636103.

For Bookings **99525 09812**

# Excel GROUP INSTITUTIONS

Approved by AICTE, CoA, NCTE, AYUSH, NCH, NCISM, PCI, TNNMC, NCVT, New Delhi &
Affiliated with Anna University & DoTE, The TN Dr. M.G.R. Medical University, DPH, TNTEU, Chennai, Periyar University, Salem

**ENGINEERING - AUTONOMOUS**

B.E. | B.TECH. - SAFETY & FIRE | AGRI | AERO | BIOMEDICAL | CIVIL | MECH | CSE | EEE
ECE | FOOD TECHNOLOGY | IT | PETROCHEMICAL | ARTIFICIAL INTELLIGENCE & DATA SCIENCE
ARTIFICIAL INTELLIGENCE & MACHINE LEARNING
COMPUTER SCIENCE & BUSINESS SYSTEMS | M.E. - ALL BRANCHES
Ph.D. - CSE | ECE | MECH | PHYSICS
M.Tech. - CSE - 5 Years (After+2)

A+ NAAC | NBA | 2634 Counselling Code

**3/2 YEARS DIPLOMA COURSES**

AUTO | MECH | CIVIL | ECE | EEE
COMPUTER ENGINEERING | MEDICAL LAB TECHNOLOGY
TECHNICIAN X-RAY TECHNOLOY

**BUSINESS SCHOOL - AUTONOMOUS**

M.B.A. | M.C.A. - 2 Years (After Degree)
M.B.A. - 5 Years (After+2)

**ARCHITECTURE**

B.ARCH. | M.ARCH.

Counselling Code 2667

**EDUCATION**

B.Ed. | M.Ed.

**COMMERCE & SCIENCE**

B.A. - TAMIL, ENGLISH | B.Com. | B.Com. - CA | B.Com. - AF | B.Com. - PA | B.Com. - IT
B.B.A. | B.Sc. - BIOCHEMISTRY | COMPUTER SCIENCE | MICROBIOLOGY | DATA SCIENCE
VISUAL COMMUNICATION | COSTUME DESIGN & FASHION | TEXTILE & FASHION DESIGNING
ARTIFICIAL INTELLIGENCE & DATA SCIENCE | CYBER SECURITY | INFORMATION TECHNOLOGY
CLINICAL LABORATORY TECHNOLOGY | ARTIFICIAL INTELLIGENCE & MACHINE LEARNING
B.C.A. | M.Com. | M.A. ENGLISH | M.Sc. - MICROBIOLOGY | COMPUTER SCIENCE
TEXTILE & FASHION DESIGNING | M.S.W.

1103 Offers | 1004 Students Placed

**B.H.M.S.**
**B.S.M.S.**
**B.N.Y.S.**

Naturopathy & Yoga - NEET Not Neceesary

PHARM.D.
M.PHARM. Pharmaceutics Pharmacy Practice
B.PHARM. | D.PHARM.
B.P.T. - PHYSIOTHERAPY
B.O.T. - OCCUPATIONAL THERAPY*
B.Sc. - NURSING (Male / Female)
GNM | HEALTH INSPECTOR
B.Sc. - R.I.T. | M.L.T.

NH-544, Salem - Coimbatore Highway, Komarapalayam - 637 303
+91 98427 13789
excelinstitutions.com

# தி காவிரி கல்வி நிறுவனங்கள்

மேச்சேரி, சேலம் - 636 453.

ACCREDITED WITH GRADE A+ CGPA 3.43 NAAC

**பொறியியல் கல்லூரி (Autonomous)**

**B.E.**

Counselling Code 2625

- Biomedical Engineering
- Civil Engineering
- Computer Science Engg.
- Electrical & Electronics Engg.
- Electronics & Communication Engg.
- Mechanical Engineering

**B.Tech.**

- Artificial Intelligence and Data Science
- Information Technology
- Chemical Engineering
- Agricultural Engineering

**பாலிடெக்னிக் கல்லூரி**

- Medical Laboratory Technology
- Artificial Intelligence & Machine Learning
- Agricultural Engineering
- Fire Technology and Safety
- Chemical Engineering
- Civil Engineering
- Mechanical (T&D) Engg.
- Computer Engineering
- Mechanical Engineering
- Electrical & Electronics Engg.
- Electronics & Commun. Engg.

**B.Ed. & M.Ed.**

**கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

B.A. - Tamil - English BCA BBA
B.Com. (CA) B.Com. M.Com.
B.Sc. - Chemistry - Microbiology - Computer Science - Nutrition and Dietetics - Computer Science (AI & DS)
M.Sc. - Microbiology

NURSING COLLEGE
B.Sc. - Nursing | DGNM
PHARMACY COLLEGE
B.Pharm | D.Pharm
PHYSIOTHERAPY COLLEGE
HEALTH SCIENCE

95249 36156

INSHA, 9894640139 Thirupaty Designerz, 98424 98124





Rtn. So. Kannan
District Publication Chair
Cell : 94431 88896





Rtn. M. Shanavas
District Publication Co-Chair
Cell : 98946 40139





Rtn. S. Hemanth
District GML Chair
Cell : 98946 98936